வருட சந்தா ரூ. 5. தனிப்பிரதி 1 அணா

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்.
C. N, அண்ணாதுரை M. A.

"தமிழுக்கு நிலவென்று பேர்! இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!"
[கவி பாரதி தாசன்]

மலர் 1. | காஞ்சீபுரம் 15—3—42 விசு—பங்குனி 2உ ஞாயிறு | இதழ் 2

# அவசரமாகத் தேவை!

பரதன்

"வீரமறவர்களே! ராஜாக்களே! நாயக்கர்களே! படையாட்சிகளே! நீங்கள் யாவரும் பண்டைய நாட்களில் போர் வீரர்களாக இருந்தவர்கள்" என்று அக்குலமக்கள் பெருவாரியாகக் கூடியிருந்த கூட்டத்தில் தோழர் ராஜகோபாலாச்சாரியார் கூறினாராம். போர் வீரர்களாக முன்பு இருந்தவர்களை, மீண்டும், போரில் ஈடுபட்டு, புகழ்தேடுவதுடன், எதிரியை விரட்டியடிக்க முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டாராம். எப்போது கிளம்பவேண்டும் அந்தமக்கள்? உடனே கிளம்பவேண்டுமா? இல்லை! ஆச்சாரியார் சுயராச்சியம் பெற்றதும் செய்தி விடுப்பார், அப்போது புறப்படவேண்டுமாம். அதுவரையில் அவரது பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கலாம் போலும்! கிடக்கிறது, ஆச்சாரியார் ஆசையும் ஈடேறட்டும், அடுத்த மாதத்துக்குள் வைஸ்ராய் நிர்வாக சபையிலே வேலைகிடைக்கும் என்று ஆரூடம் கூறியிருப்பார்கள். கிடைக்கட்டும், அனுபவிக்கட்டும்! அந்த வேலை கிடைத்ததும், நாட்டுக்கே சுயராச்யம் வந்துவிட்டதாகக் கூறட்டும், அதைநம்பும் ஏமாளிகள் நம்பட்டும். அப்போது, மறவரும் நாயக்கமாரும், படையாட்சிகளும் ராஜாக்களும், படையில் சேரட்டும், எனக்கு சம்மதமே. ஆனால், ராமநாதபுரத்திலே ராஜகோபாலாச்சாரியார், ஞாபக மூட்டினாரே, "ஒருகாலத்தில் நீங்கள் போர்வீரர்களாக இருந்தீர்கள்" என்று அதை மறக்கவேண்டாம் என்று வீரத்தமிழருக்கு நான்வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

ஆச்சாரியார் பேச்சு, முகஸ்துதிக்காக இருக்கக்கூடும், இத்தகைய போர்ப்பழக்கமுள்ள மக்கள் என்னிடம் இருக்கிறார்கள் என்று சர்க்காருக்கு ஜாடையாக எடுத்துக்காட்டுவதாக இருக்கக்கூடும். அவரது அந்தரங்க நோக்கம் எதுவாயிருப்பினும் அந்த உண்மை அவரிடமிருந்து அன்றுவெளிவந்ததே அது எனக்குப் பரமதிருப்தி. ஏன்தெரியுமோ! அந்தவீரமக்கள், தமது பண்டைநாட்பண்பை மறந்ததால், மனம் சுருங்கிப் போயிருக்கிறார்கள், வீரஞ்செறிந்த அந்த மக்கள், துருப்பிடித்த கத்திபோல் உள்ளனர்.

முக்குலத்தாரின் கோரிக்கைகளை ஆச்சாரியார், முதலமைச்சராக இருந்தபோது ஏற்றுக்கொள்ளவில்லை.

குற்றப் பரம்பரைச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கிளர்ச்சிநடந்தபோது, அவர் கேளாக் காதராகவே இருந்துவிட்டார். வீரமிக்கமக்கள் வெம்பி இருப்பதைக்கண்டும், பச்சாதாபப்படாத அவர், இராமநாதபுரம் கூட்டத்தில், "அன்றொரு நாள் நீங்கள் போர்வீரர்களாக இருந்தீர்கள்" என்று கூறினர்! வாயாரக்கூறினர்! மனமாரக்கூறுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அதனைக் காதாறக்கேட்ட மக்கள், தீரயோசிக்க வேண்டும்.

வலிவும் வசீகரமும் வயோதிகத்தால் வதங்கி விடுவதுண்டு. மழையில்லாக் குறையால் நஞ்சையும் புஞ்சையும் காடுமேடாகிவிடுவதுண்டு. உயிரில்லையேல் பிணம், உணவில்லையேல் நடைப்பிணம், ஆகிவிடுவர் மாந்தர். ஜீவசக்தி குறையக் குறைய, எந்தப்பிராணியும், பழயபண்பை இழந்துவிடுகிறது. இயற்கையாக இங்ஙனம் கேடு நேரிடுவதால் 'கதி' கெட்டுவிடுவது மட்டுமல்ல, செயற்கையால், பிறரின் சேட்டையால், வளங்கெட்டு, வாட்டம்பெற்ற வகையறுக்களும்உண்டு. பெய்கிறமழையை யாரும் தடுத்துவிடவில்லை ஆகவே நெற்கதிர் சாய்ந்துகிடக்க வேண்டிய நிலங்களில் முட்கதிர் கிடப்பதற்கு, யாருடைய சேட்டையும் காரணமல்ல. ஆனால், மழையும்பெய்து, உழவனும்உழைத்து, கதிரும் முற்றி, அறுவடைக்கு ஏற்ற பக்குவம் வருஞ் சமயத்தில், இருண்ட மனதுடைய குறும்புக்காரன் எருமை மந்தையைக் கழனியில் மேயவிட்டு பயிரை அழித்தால், அந்த அக்ரமத்தால் அழிந்த நிலத்தைக் காணுவோருக்கு நெஞ்சுபதறும், கோபம் பொங்குமன்றோ. மழையில்லாக்குறையால் கரம்பான நிலத்தைக்காணும்போது துக்கம் மட்டுமே ஏற்படும். ஆனால், செழித்துவளர்ந்த பயிரை சேட்டைக்காரன் அழித்தது கண்டால் துக்கமல்ல, ஆத்திரமே முதலில்வரும். அதுமிகப் பொல்லாத விளைவுகளுக்கும் பிறப்பிடமாகலாம்!

மறவர், படையாட்சிகள் விஷயத்திலிருந்து பயிர் பச்சை விஷயத்துக்குப்பாய்ந்தது ஏன்? என்பீர். முன்னாளில் போர்வீரர்களாக இருந்த அந்தமக்கள், இந்நாளில் இருக்கும் நிலைமை என்ன? அந்த நிலைமை, இயற்கைவளங் கெட்டதால் வந்த "வினையா" அன்றி சேட்டைக்காரர் செய்த "தீவினை" மூண்டதால் வந்ததா என்பதை, அவர்களும், பொதுவாகத் தமிழரும் எண்ணிப்பார்க்க வேண்டும் என்றுகூறவே நஞ்சை புஞ்சையை நடுவே இழுத்துப் பேசினேன்.

சிங்கப்பூர், ஷோனன் என்ற புதுப்பெயர் பெற்றுவிட்டது. காரணம் எதிரிகள் பிடித்துக்கொண்டனர். சயாம், தாய்லந்து என்ற புதுப்பெயரைச் சிலஆண்டு

களுக்கு முன்பு பெற்றது, காரணம் எதிரியின் படைஎடுப்பல்ல. சயாமியர்களின்எண்ணம், புதுப்பெயரைத் தமது நாட்டுக்குத்தந்தது. நாட்டுநிலை, மக்கள்நிலை, மக்களிடமுள்ள பண்டங்களின்நிலை முதலியன, இயற்கைக்கேடுகளால் கெடுவதுண்டு, செயற்கையால் கெடுவதுமுண்டு. இந்த இரண்டில், முன்னதாயின், யார் மீதும் நொந்துகொள்வதற்கில்லை, பிந்தியதாயின் சிந்தனைக்கு வேலை கொடுக்கத்தான் வேண்டும்.

என்எதிரிலே, தோழர் ஆச்சாரியார் எதிரேஇருந்த மறவர், ராஜு, நாயக், படையாட்சி முதலிய குலத்தவர் இதுபோதுஇல்லை. ஆனால் "திராவிடநாடு" அவர்களைத் தேடிப்போகிறது. ஆகவே அதன் வாயிலாக அவர்களிடம் பேசுகிறேன்.

“மறவர்களே! ராஜுக்களே! நாயக்கர்களே! படையாட்சிகளே! தோழர் ஆச்சாரியார் கூறினது உண்மை. நீங்கள் அக்காலத்தில் போர்வீரர்களாக இருந்தீர்கள். கோட்டைகளைக் காவல்புரிந்தீர்கள். கொத்தளங்கள் கட்டினீர்கள். அகழ் வெட்டியும் அரண் அமைத்தும் எதிரியைத் தடுத்தீர்கள். வாளேந்தினீர், வாகை சூடினீர். வல்லமையுடையவராக விளங்கினீர், வாழ்ந்தீர். ஆம்! அது உண்மை. ஆனால் இன்று உமது நிலைமை என்ன? வாலிபத்தை இழந்தீர், வளமிழந்தீர், வலிமையிழந்தீர், உண்ணும் உணவுக்குப்போரிடுகிறீர், உழைக்கிறீர் அலுக்கிறீர் படுக்கிறீர் புரள்கிறீர் உறக்கமின்றி. வெற்றிக்கொடியேந்திய கரங்கள் இன்று கட்டை வெட்டுகின்றன! கற்களைப்பிளக்கின்றன! ஏன்? இந்த மாறுதல் வரக்காரணம் என்ன? வீரர்கள்வீழ்ச்சிக்குக் காரணம்யாது? அன்னியஆட்சியா காரணம்? அன்னிய ஆட்சியின் பயனாக, நீங்கள் வீழ்ந்தீர் என்றால், அந்தணர்மட்டும், அந்தஆட்சியிலும், முன்னாளில்இருந்தது போல் இருக்கக்காரணம் என்ன? கோட்டை கொத்தளங்கள் இடிந்தனவே, அக்கிரகாரம், அன்றும்இன்றும் இருந்த நிலை கெடாது இருக்கக்காரணமென்ன? போர்வீரர்களாக இருந்தவர்களே, உமது புகழ் போய்விட்டதே, புரோகிதக் கூட்டத்தின் செல்வாக்கு அலெக்சாண்டர் படைஎடுத்த காலந்தொட்டு ஆங்கிலேயன் அல்லற்படும் இக்காலம்வரை சிந்தாது சிதையாது இருக்கக்காரணம் என்ன? அன்றுநீங்கள் “கரும்பருகே கருங்குவளை” பூத்த கழனிகளைக்கண்டீர், இன்றுகவலை பூத்த குடும்பக்காடுகளில் உலவுகிறீர். உழவர் பலாக் கனியைப்பறித்து மந்தியைவிரட்ட வீசுவராம், அவை, தென்னைமரத்து இளங்காயைப்பறித்துப் பதிலுக்கு வீசுமாம், நீங்கள் வாழ்ந்தகாலத்தில்! இன்று? வீரமிக்கவரே தோள்வலிமை போச்சே, துரைமார் அதிகாரமாச்சே, என்று பாடுகிறோம், ஆனால், அந்த தர்ப்பையின் வலிமைமட்டும் போகவில்லையே அதனைக்கண்டீரோ. காரணங்கூற வல்லீரோ! அன்னிய ஆட்சிக்கு முன்பு, அரசு உம்முடையது, இன்று இல்லை. ஆனால், அன்னிய ஆட்சிக்கு முன்பும் ஆரியருக்கு அதிகாரம் இருந்தது, இன்றும் இருக்கிறது, இந்த செப்படி வித்தையை நோக்குங்கள்!

மழையில்லாத குறையால் கழனிகள் காய்ந்து போகுமானால் ஒரு கழனிமட்டும் எப்போதும்போல், இருக்கமுடியாதல்லவா? வருகிறவாய்க்காலை, ஒரே ஒரு கழனிக்குமட்டும் திருப்பிவிட்டு. மற்றைக் கழனிகளுக்கு நீர்பாய்ச்ச மறுத்தால், மற்றவை காய ஒன்று மட்டும் ஒய்யாரமாக இருக்கும். அது போலாயிற்று இங்கும். ஒருகுலம் வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளைப்பெறும் வாய்க்காலைப் பிடித்துக்கொண்டது. குன்றாமல் வாழ்கிறது. மற்றக்குலங்கள்,புறம்போக்கு நிலங்கள் போலாயின. மண்வெட்டிக்கூலி தின்னலாச்சே, எங்கள் மனவலிமை தோள்வலிமை போச்சே, என்று கூவிப்பயன் என்ன? கெட்டது, இயற்கைக்காரணங்களால் அல்ல, விஷமிகளின் சேட்டையே கெடுதியை விளைவித்தது.

ஆச்சாரியாரே, அந்த வாழ்ந்து விழ்ந்த குலத்தவரிடம் பேசினதுபோல், உமது இனத்தவரிடம் நீர் பேசுவதானால், “ஆச்சாரியார்களே! அய்யங்கார்களே! சர்மாக்களே! சாஸ்திரிகளே! கனபாடிகளே, குருக்கள்மார்களே!ஆரியரே ! நாம் அந்தக்காலந்தொட்டு இன்றுவரை, மேல்ஜாதி மக்களாய், பகவத் பிரதிபிம்பங்களாய், குருமாராய், சாணக்கியர்களாய், குல்லூகபட்டர்களாய், ரிஷிகளாய், அர்ச்சகர்களாய், புரோகிதராய் பூபதிகளின் தயவைப்பெற்றவராய் வாழ்ந்துகொண்டு வருகிறோம். எந்த அரசுபோனாலும் எவ்வித மாறுதல் வந்தாலும், நமது செல்வாக்கு மங்கினதில்லை. கோயிலும், குளமும், சத்திரமும் சாவடியும், அரண்மனையும் வீடுகளும், நமது விஜயத்துக்காகவே உள்ளன. க்ஷத்திரியரின் பலம் நமக்குப் பாதுகாப்பைத்தந்தது, வைசியரின் செல்வம் நமக்கு வாழவழிதந்தது, சூத்திரரின் பணிவிடை நமக்கு சுகமளித்தது. இன்றும் நிலைமை அதுவே. இப்போதும், நானே மாகாண சுயாட்சியில் முதல் மந்திரி, மகாத்துமா தோன்றினார் அவரின் சம்பந்தி! திருவாங்கூரிலே நம்மவரே திவான், பரோடாவில் நம்மவர், காஷ்மீரில் நம்மவர். மீவாரில் நமது விஜயராகவாச்சாரியாரே திவான்! வேதாந்தஉலகில் நமது ராதாகிருஷ்ண பந்துலு இருக்கிறார், சங்கீதத்தில் நமது அரியக்குடியார்! நாட்டியத்தில் நமது ருக்மணிதேவியார், எங்கும் நமக்குக்குறைவில்லை. எப்போதும் இருந்ததில்லை. ஆங்கில அரசும் நமக்குப் பரிசுகள் தாராமற்போகவில்லை, அரபு அரசும் நம்மை ஆகாதவர் என்று ஒதுக்கவில்லை, அடால்ப் ஹிட்லர்கூட நமது ஆரிய பரம்பரை!யார் வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும், அரசுகளில் மாறுதல் ஏற்பட்டாலும் இல்லையானாலும், ஆரியரின் ஆதிக்கம் கெடாதவரை நமக்குக் கவலை என்ன? ஆகவே அன்றும் இன்றும் நமக்கு அதிகாரத்தைத் தந்த, அந்த பஞ்சாங்கம், தர்ப்பை, ஆகியவைகளை சர்வஜாக்ரதையாக வைத்துக்கொள்ளுங்கள். ருக், யஜுர், சாமம், அதர்வணம் ஆகியவைகளை மனனம் செய்யுங்கள்.” என்றுதானே கூறவேண்டிவரும், உண்மையை உரைக்கும் விரதம் பூண்டால்!

ஆச்சாரியாரைக்கேட்க நான்மட்டும் ஆசைப்பட்டு என்னபலன்? வீரமிக்க தமிழர் வீறுகொண்டெழுந்து கேட்கவேண்டும். அப்போதுதானே தெரியும், தமிழர் தவிக்கும் உண்மைக்காரணம்!

இவ்விதமாகவெல்லாம் அங்கு எண்ணிப்பார்க்க மாட்டார்கள் என்ற தைரியம் ஆச்சாரியாருக்கு ஏன் ஏற்பட்டதோ நானறியேன். யார் என்னவேண்டுமானாலும் எண்ணிக்கொள்ளட்டும், நாம் “போடுகிற போடு” போட்டு வைப்போம் என்ற முறையிலே ஆச்சாரியார் பேசுகிறார். இவ்வளவு அதிசமாக இவர் பேசுவதிலிருந்தே, வெகுவிரைவில், சர்க்கார் உத்யோகம் பெறப்போகிறார் என்றுதெரிகிறது. வைசிராய் நிர்வாக சபையிலே அமர்ந்துவிட்டால், இவ்விதம் பேச இடமேது.

“உள்நாட்டுப் பாதுகாப்புமெம்பர்,ஊர்காப்புக்காக என்னென்னசெய்திருக்கிறார்,என்பதைக்கூறமுடியுமா?” என்று ஆச்சாரியார் வைசிராய் நிர்வாக சபையிலே பதவி பெற்றபிறகு, தோழர் சிவராஜ் கேட்கிறார் என்றுவைத்துக் கொள்ளுங்கள். அப்போது. “வீரமரபினர்களைக்கொண்ட விறுவிறுப்பான படைகள் நிருவியுள்ளேன்;’ என்று ஆச்சாரியார் பதில்கூறுவார்?

“உள்நாட்டுப்பாதுகாப்புக்கான முறைகளைச் சர்க்கார் செய்திருக்கின்றனர். விவரம்கூறுவது, எதிரிக்குத் தகவல் கொடுப்பதாக முடியும்” என்று மணிபோல் மலர்வார்.

“மறவர் முதலிய வீரமரபினரைப் படையில் சேர்க்க, கனம் உள்நாட்டு மெம்பர் ஏற்பாடுகள் செய்

(11 ம் பக்கம் பார்க்க.)

காட்சியும் கருத்தும்.

# புத்தர் புன்னகை!

C. N. A.

**தோழன்:**

சித்தார்த்தரே! சிந்தை நொந்தவர்போல் நீர் இருப்பானேன்? உமக்கென்ன குறை? நீரோ கீர்த்திவாய்ந்த மன்னரின் மகன், சாம்ராஜ்ய சித்திரம், உமக்குமனோரம்மியமான மாளிகைஇருக்கிறது, சிங்காரத்தோட்டமிருக்கிறது, அதோபாரீர், நீலப்பட்டாடை அணிந்த மயிலாள் பச்சைக்கம்பளி மீது நடனமாடுகிறாள். குயில் கூவுகிறது. மயிலின் சாயல் குயிலின் இனியகுரல், தென்றல் போன்ற குணம் கொண்ட தர்மபத்தினியும், செல்வக் குழந்தையும் உமக்கு உள்ளனர். இவ்வளவு இருக்க நீர் ஏன் முகவாட்டத்துடன் இருக்கிறீர். சந்திரனுக்கும் களங்கமுண்டு, உமக்கு அதுவுமில்லை! ரோஜாவில் முள் உண்டு. உமது வாழ்க்கை முள்ளில்லாத ரோஜாவாயிற்றே. ஸ்ருதியுடன்சேர்ந்த சங்கீதம் போன்றுள்ள உமது வாழ்க்கையில், வசீகரம் இருக்கக் காரணமிருக்கிறதே தவிர விசாரத்துக்குக் காரணமில்லையே. அரண்மனை உம்மை அழைக்கிறது. மணிமுடி உமக்குச் சித்தமாக இருக்கிறது. கொலுமண்டபத்தில் மந்திரிப்பிரதானிகள், இளவரசர் என்றைய தினம் சிம்மாதன மேறுவாரென்று ஆவலோடு காத்துக் கொண்டிருக்கின்றனர். வாழ்க்கை உம்மிடம் கொஞ்சிவிளையாடுகிறதே, வலிய அணையும் சுகத்தைப் பெற்றும், வாட்டம் உமக்கு ஏன்?

**சித்தார்த்தர்:**

நண்பா! என் சிந்தனையைக் கெடுத்து விட்டாய். நீ விவரித்த வசீகரங்கள் என்னை வாத்சல்யத்துடன் வரவேற்கின்றன. குதூகலமூட்ட, பலருண்டு. ஆனால் சந்திரனை கருமேகம் பிடித்துமறைப்பதுபோல், என் வாழ்க்கை வசீகரத்தை ஒருவாட்டம் மறைக்கிறது. சந்திரன், மேகத்தை மிரட்டி அடித்துவிட்டு, மினுக்கிக் கொண்டு வரக்கண்டிருக்கிறேன். ஆனால் நானோ, வாட்டத்தினிடமிருந்து விடுதலைபெறுவது முடியாத காரியம்.

**தோழன்:**

இளவரசே! சோகத்தின் காரணம் என்ன? மன்னிக்க வேண்டும். மதனனின் கணைகள்..............

**சித்தார்த்தர்:**

சிச்சீ! என்மனைவியின் அன்பெனும் கோட்டையின் முன்பு, அக்கணைகள் கூர்மழுங்கிக் கீழேவிழும். என்னை வதைப்பது அதுவல்ல.

**தோழன்:**

வேறுகாரணம் யாதாக இருக்கும்?

**சித்தார்த்தர்:**

மல்லிகையும் மனோரஞ்சிதமும், ஜாதிக்காய் இருக்கிறது பஞ்சணைமீது. தென்றல் வீசுகிறது, நிலவு நடனமாடுகிறது! யாழ் ஒலிக்கிறது. ஆம்! இவ்வளவையும் நுகர்ந்து, இன்பத்தில் ஈடுபட ஆவலோடு பஞ்சணைக் கருகில் சென்றால், மலரணை மீது மங்கையில்லை, சீறும் நாகம் இருக்கிறது. என்வாழ்க்கைப் பஞ்சணையில் சீறும் நாகத்தை நான் கண்டேன். கலக்கம் ஏற்படாதோ, கூறு?

**தோழன்:**

சீறும் நாகம் எங்கே?

**சித்தார்த்தர்:**

எங்கேயா? எங்கும் அதனைத்தான் காண்கிறேன். சுகம், போகம், ஆட்சி, அன்பு, இவைகள் தவழும் வாழ்க்கைப் பஞ்சணையில், படுத்துக்கொண்டிருப்பது, வறுமை, மூப்பு, நோய், மரணம், எனும் நாலு தலைகள் கொண்ட நாகம். அதனைக் கண்ட பிறகு, எனக்கு வாழ்க்கைப் பஞ்சணையில் படுக்க மனமில்லை.

**தோழன்:**

இதைத்தான் கூறினீரா! நன்று, நன்று! பால் போல் காயும் நிலவும் சிலநாள் தேயும். இருளும் ஒளியும், இன்ப துன்பமும், இயற்கைதானே. இதனைமாற்ற நாமா அதிகாரிகள்? சுகம்கிடைக்கும்போது அதனை நுகருவது. துக்கம் நேரிடுங்காலையில், சகித்துக்கொள்வது என்பதைத் தவிர வேறுவழி ஏது?

**சித்தார்த்தர்:**

புதுவழி காண்பேன். போகங்களைத் துறந்து அரசைவிட்டு நீங்கி அலைந்துதிரிந்து, இன்பமும் துன்பமும் பிணைந்துள்ள முடியை அவிழ்த்துவிடும் "வித்தை" யைக் கற்பேன். அந்தப்புரத்து அலங்காரியும் வேண்டாம், அரசபோகமும் வேண்டாம். உண்மையை உணரும் வேலையில் ஈடுபடுவேன். உத்தமர்களை நாடுவேன். யோகங்கள் புரிவேன். தவசிகளை அடுப்பேன். அவர்தம் கருத்துக்களைச் செவிமடுப்பேன். நாலுதலை நாகத்தை நசுக்குவேன்.

* * * *

புத்தருக்கும் அவரது தோழருக்கும், மேலே தீட்டியுள்ளது போன்ற பேச்சு நடந்திருக்கக் கூடும். இளவரசர், துறவியாகுமுன்னம், தமது தோழருடன் கலந்து பேசியிருப்பார். இல்லையேனும், அவருடைய மனதிற்குள்ளாகவேனும் இத்தகைய கருத்துப்போர் நடைபெற்றுத்தான் இருக்கும். இறுதியில், சித்தார்த்தர், துறவுக்கோலம் பூண்டார். புத்தரானார்

கருணை ததும்பும் பார்வையால் அவர் கசடர்களின் கல்மனதையும் கரைத்தார். புன்சிரிப்பால், புரோகிதரின் பொச்சரிப்பைப் பொசுக்கினார். அன்பினால், ஆரியப்புரட்டர்களைப் புறமுதுகிட்டு ஓடச்செய்தார். கொலையை வேள்வி என்றும், குருட்டுத் தனத்தைச் சாத்திர மென்றும், ஆபாச ஆட்டங்களை ஆண்டவன் பணியென்றும், சாதிச்சனியனைக்கடவுள் கட்டளை என்றும்கூறி, மக்களைச் சிறைப்படுத்திய பார்ப்பனீயத்தைப் புத்தரின்புரட்சி, மூலைக்குவிரட்டி விட்டது. புத்த மார்க்கம், வஞ்சகவர்க்கத்தவரை வீழ்த்திற்று. ஆனால்...

இந்தியாவில் தோன்றிய புத்தமார்க்கம், இந்தியாவில் இல்லை! சீனநாட்டில் இருக்கிறது!! புத்தரின் மறைவுக்குப்பிறகு, புதருக்குள் மறைந்திருந்த ஆரிய அரவம் வெளிக்கிளம்பி, மீண்டும் தனது விஷப்பல்லுக்கு வேலைதேடிக்கொண்டது. புத்தமதம் இந்தியாவி

(5ம் பக்கம் பார்க்க)

தொடர் கதை.

# குமாஸ்தாவின் பெண்தான்!

அல்லது

# கொலைகாரியின் குறிப்புகள்

சௌமியன்

I.

"ஆமாம்! நானும் ஒரு குமாஸ்தாவின் மகள்தான். என் பெயர் காந்தா. **குமாஸ்தாவின் மகள்** என்ற நாடகம் பார்த்திருக்கிறீர்களோ. அந்தநாடகக் கதையிலே வரும் குமாஸ்தாவின் பெண்ணுடைய பெயர் சீதா. அவள் சமுதாயக் கொடுமையால் செத்தாள். தற்கொலை செய்து கொள்கிறாள். அதுநாடகத்தில்நடப்பது. நிஜமாகநடந்ததல்ல. நான் அதேவிதமான கொடுமையால், சாகவில்லை, ஒருவனை, என் ஆசைநாயகனை, சாகடித்தேன். நாடகத்திலே, பரிதாபத்துக்குரிய சீதா தற்கொலை செய்து கொள்கிறாள், நான், பழிபாவத்துக்கு அஞ்சாதவள். கொலைசெய்தேன். என்னைத்தண்டிக்கத்தயாராக உள்ள நீதிபதியே, தாராளமாகத் தண்டியுங்கள்- ஆனால் தண்டிப்பதன்மூலம், நீங்கள் இந்த ஒரு காந்தாவை அடக்கலாம். இதே நேரத்திலும், இனியும் தோன்ற இருக்கும் காந்தாக்களைத் தடுக்க என்னசெய்வீர்? பிளேக் வந்தவனுக்கு ஊசி போட்டுவிட்டால், ஊரிலே வேறுயாருக்கும் பிளேக் வராதுஎன்று கூறிவிட முடியுமா? இந்தக்காந்தாவைக் கொன்றுவிட்டால், இனி வேறு காந்தா கிளம்பமாட்டாள் என்று எண்ணுகிறீர்கள்!

என் இளவயதில் நான் தூக்குமேடை ஏறவேண்டுமே என்று எனக்குப் பயமுமில்லை, துக்கமுமில்லை, என்னைப்பற்றி ஊரார் ஏசுவார்களே என்று வெட்கமுமில்லை. அந்த உணர்ச்சிகள் என்னை இப்போது அண்டுவதில்லை. மறத்துபோன மனம் என்னுடையது. உளுத்துப்போன நியதிகளை நீதியாகக்கொண்ட உலகம்இது.

ஏனய்யா, இப்படி விறைத்துப் பார்க்கிறீர். கவலையா? எனக்கு மரணதண்டனை தரவேண்டுமே, என் செய்வது, அறியாத பெண்ணாயிற்றே இவளைச்சாகச் சொல்வதா என்று சோகமா உமக்கு? பாபம்! நான் உயிரோடு இருப்பதாகவா கருதுகிறீர்.? நான் இறந்து பத்தாண்டுகள் கிட்டத்தட்டவாகிவிட்டன. கள்ளங்கபடமற்ற காந்தா பன்னெடு நாட்களுக்கு முன்பே கொல்லப்பட்டாள். இந்தக்காந்தா, பழிவாங்கும் பேர்வழி.

வழக்கை வளர்த்திக்கொண்டிருக்க வேண்டாம். சோமுவை நான் தான் கொன்றேன். கழுத்தைத்திருகினேன். அவன் இறந்தான். சாகும்போதுகூட நான் அவனை அணைத்துக்கொண்டிருந்தேன். அவனை மட்டும் நான் கொல்லாது போயிருந்தால், என்ன நடந்திருக்கும் தெரியுமோ? சோமு ஒரு கொலைகாரனாகி இருப்பான். இப்போது நான் நிற்கும் இடத்தில் அவன் நின்று கொண்டிருப்பான். நான் அவனுக்குக், கடைசியாகச்செய்த உதவி, அவனைக்கொன்றேனே அதுதான். பத்தாண்டுகளுக்கு முன்பு சோமு என்னைக்கொன்றான். இப்போது நான் அவனைக்கொன்றேன்; அவனுக்கு உதவி செய்தேன்.

ஏன் விழிக்கிறீர்கள்? நான் உளறுவதாக நினைக்கிறீர்களா? அப்படித்தான் எண்ணுவீர்கள். சகஜம். என்னுடையவாழ்க்கை வரலாற்றை நானேஎழுதிவைத்திருக்கிறேன். அது கிடைத்தால், என்மரணத்துக்குப் பிறகு அதைப்படியுங்கள், விஷயம் விளங்கும். போதும் நான் உலகில் வாழ்ந்தது. விடைகொடுங்கள், செல்கிறேன். முதலில் என்னைத்தண்டித்து விடுங்கள். உங்கள் வேலை முடியட்டும். பலருடைய ஆசையும் நிறைவேறட்டும்.

சோமுஎன்ற தனது "ஆசைநாயகனை"க் கொன்றதாக, காந்தாஎன்ற மாது குற்றஞ்சாட்டப்பட்டு, சென்னைக்கோர்ட்டிலே விசாரணை நடந்தது. காந்தாவுக்கு வயது இருபத்தைந்து அல்லது இருபத்தாறு இருக்கும். அழகி ஆனால் கொலைகாரி! அதற்கு ஏராளமானருஜு கிடைத்து விட்டது. தண்டனை நிச்சயம், என்று, இந்தவழக்கைக் காணவந்திருந்தவர்கள் பேசிக்கொண்டனர். கோர்ட்டிலே காந்தா, பயமோ பதைப்போ, துக்கமோ துடிப்போ இல்லாமல், மிக அமைதியாக இருந்ததைக்கண்ட நீதிபதி, வக்கீல் முதலானவர்கள், தூக்குமேடைக்குப் போவோம் என்று தெரிந்தும், இவளுக்கு இவ்வளவு தைரியம் எப்படிப்பிறந்தது என்று எண்ணி ஆச்சரியமடைந்தனர். பல சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டபிறகு, குற்றவாளி ஏதாகிலும் கூறவேண்டி இருக்கிறதா என்று நீதிபதி கேட்டார். அப்போது காந்தா பேசியது, மேலேநாம் விவரித்தது. கோர்ட்டாருக்கோ, வேடிக்கை காணவந்தவர்களுக்கோ, காந்தா பேசியதன் பொருள் விளங்கவில்லை. தூக்குத் தண்டனை விதிப்பார்கள் என்று கிலிபிடித்துக்கொண்டதால், காந்தாவின் மூளை குழம்பிவிட்டதென்றும், பைத்தியம் பிடித்ததாலேயே, ஏதேதோ உளறினாளென்றும், கோர்ட்டில் பேசிக்கொண்டனர். ஆனால் உண்மையில் காந்தாவுக்குப் பைத்தியமுமில்லை, மனக்குழப்பமுமில்லை. மிகத்தெளிவாகவே இருந்தாள். காந்தாவுக்கு, தூக்குதண்டனை விதிக்கப்பட்டது. வழக்கமான சடங்குகளுக்குப்பிறகு காந்தா தூக்கிலிடப்பட்டாள்.

காந்தாவின் கதிகண்டு வருந்தினவர்கள் யார்? அவளது தங்கை சாந்தாவும், அவளது காதலன் சங்கரனுந்தவிர வேறு யாரும் வருந்தவில்லை.

விபசாரி! கொலைகாரி! குலத்தைக்கெடுத்தவள்! மிராசுகுடும்பத்தை அழித்தவள்! சோமுவைக் கொன்றவள்! — என்று பலர் பலவிதமாகத் தூற்றினார்கள். காமத்துக்குப்பலியான சோமுவின் பரிதாபச் சிந்து காலணா என்றும், கொலைகார காந்தாவின் கோரமரணம் என்றும் பாட்டுபுத்தககங்கள் விற்கப்பட்டன. பத்திரிகாசிரியர்கள் விபசாரத்தால் வந்த வினை என்று தலையங்கங்கள் எழுதித்தீர்த்தனர்.

வழக்கும் தூக்கும் வம்பளப்பும் முடிந்து சில நாட்கள் சென்றபிறகு, சாந்தாவும் சங்கரனும் சென்னையை விட்டு வெளியேறி, கலியாணம் செய்துக்கொண்டு, ஒரு கிராமத்தில் வசித்துவந்தனர். அவர்களிருவருக்குமட்டுமே காந்தாவின் பரிதாப வரலாறு முழுவதும் தெரியும். காந்தாவின் 'டைரி' அவர்களிடந்தான் இருந்தது.

சங்கரன், காந்தாவின் டைரியைப் புத்தகமாகப் பிரசுரிக்கத்தீர்மானித்தான். உலகில், மறுபடியும் காந்தாவைப்பற்றித்தாறுமாறாகப் பேசுவார்களே! எதற்காக அத்தகைய வம்பளப்புக்கு இடமளிக்கவேண்டும்.

புத்தகம் போடக்கூடாது என்று சாந்தா கூறினாள். "சாந்தா! உலகத்தார் காந்தாவைத் தூற்றினாலும் கவலையில்லை. அவளது வாழ்க்கை வரலாற்றைப்படித்து ஒருவரிருவராது பாடம் கற்றுக்கொண்டால் போதும். மேலும், விஷயத்தைத்தப்பகுத்தறியக் கூடியவர்கள்! காந்தாவைப்பற்றிப் பரிதாபப்படுவார்களேயன்றி, பழிக்க மாட்டார்கள். அவர்கள் தூற்றினாலுஞ்சரி, கவலையில்லை. நான் காந்தாவின் டைரியைப்பிரசுரிக்கத்தான் போகிறேன். நாமிருவரும் சேர்ந்து முகவுரை எழுதுவோம்" என்று சங்கரன் கூறினான். அங்ஙனமே செய்தான். எவ்வளவோ எதிர்ப்புகளை அடக்கி சாந்தாவைக் காதலியாகப் பெற்றவன் சங்கரன். அது வேறுகதை! ஆகவே அவன் தீர்மானித்தால், நிறைவேற்றாமல் விடுவதில்லை. காந்தாவின் "டைரி" புத்தகரூபமாக வெளிவந்தது. சிலர் கண்ணீர் விட்டனர் படித்து முடித்ததும். சிலர், "இதை வெட்கமின்றி வெளியிட்டானே பிரகஸ்பதி" என்று சங்கரனைத் திட்டினார்கள். ஆனால், அந்த டைரியைப் படிக்காதவர்கள் வெகு சிலரே. அந்த டைரி தான் இதோ இனிநான் உங்களுக்குத்தரப்போவது. கேளுங்கள் காந்தாவின் டைரியை...! காந்தா எழுதியதில் சிறுசிறு பிழைதிருத்தங்கள் செய்ததேயன்றி விஷயத்தை மாற்றவில்லை. காந்தா எழுதினதில் காணப்பட்ட எழுத்துகளில் இருந்த பிழையை நான் திருத்தினேனேயன்றி அவள் எண்ணத்தை, நடந்த சம்பவங்களை, காந்தா, எழுதினபடி, அப்படியேதான் உங்களிடம் தருகிறேன். பாருங்கள் இந்தப்பரிதாபப் பெண்ணின் படத்தை! (தொடரும்.)


## ஏசண்டுகள் தேவை.

"திராவிட நாடு" வாரப்பத்திரிகைக்கு அனுபவமும் சுறுசுறுப்புமுள்ள டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

**"திராவிட நாடு ஆபீஸ்"**

51, நிமந்தக்காரத் தெரு, சின்னகாஞ்சிபுரம்.


## புத்தர் புன்னகை.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

லே இடம்பெற்று இருந்திருப்பின் நாட்டு நிலையும், மக்கள் நிலையும் இப்போதிருப்பதைப்போலவா இருந்திருக்கும்?

சுதேசமித்திரன் மார்ச்சு 1ந்தேதி எழுதுகிறது, "பாரதத்தாய் ஈன்றெடுத்த புத்தபகவான் உபதேச மொழிகளே சீனர் பின்பற்றும் மதம்" என்று. கோபாலகிருஷ்ணரின் பிருந்தாவன லீலைகளுக்கு மதிப்புத் தரும் மித்திரனுக்கு, இந்த வாசகத்தை எழுதும் போது துக்கமோ, வெட்கமோ ஏற்பட்டிருக்காது. பெருமையும் பூரிப்பும் உண்டாகியிருந்திருக்கும். புத்தரின் புரட்சி வேகத்தை நாடுகடத்தியவர்கள் நமது மூதாதையர், என்றஎண்ணம் ஆரியருக்குப், பூரிப்பையும் பெருமையையும் அளிக்கும். ஆனால்,பார்ப்பனியத்தால் பாழான நமக்கோ, படிக்கும்போது வெட்கமும் துக்கமும் பிறக்கிறது. ஆரியச்சேற்றில் ஓர் சீரிய செந்தாமரை பூத்தது! அது சீனச்சீமைக்குச் சென்றுவிட்டது. பூத்த இடத்தில் மீண்டும் ஆரியச்சேறே இருக்கிறது. புத்தமார்க்கம் காட்டியவழி செல்லமறந்தோம்! வெட்கம்! துக்கம்!

புத்தர், தமது அரசைத்துறந்தவர் மட்டுமல்ல. அவரது மார்க்கமும் அவரைப்போலவே இந்தியாவை விட்டு வெளியேறி, சீனம் சென்றுவிட்டது.

இன்று, "பாரதத்தாயின் பிள்ளையான புத்தர், தந்த பொன்மொழிகளைச் சீனர்போதனையாகக்கொண்டு வாழ்கின்றனர்" என்று கூறும் மித்திரன், அந்தப் பொன்மொழிகள், பிறந்த நாட்டிலே ஏன் நிராகரிக்கப்பட்டுவிட்டன என்பதற்குக்காரணங்கூறுமா?

காசிக்கு அருகே, **சாரநாத்** என்ற இடம் இருக்கிறது. அழகிய பாட்டை! வழியில் பெரும்பகுதியில், ஒரு வேப்பமரம், அதன் பக்கத்திலே ஒரு மாமரம் என்று பாதை அமைந்திருக்கிறது. சித்தார்த்தர் உலகில் கசப்பும் இனிப்பும் ஒன்றையொன்று பின்னிக்கொண்டு நிற்பதைக்கண்டாரல்லவா! சாரநாத்தில் உள்ள புத்தர் கோட்டத்துக்குச் செல்லும் பாட்டையில், இதனை நமக்கு எடுத்துக் கூறுவதுபோல், வேம்பும் மாவும் ஒன்றன்பக்கத்தில் ஒன்றாக நின்றுகாட்சிதருகின்றன. கோட்டத்தை நெருங்குகையில், வேம்பு இல்லை. மாமரங்களே உள்ளன. சித்தார்த்தர் இன்பமும் துன்பமும் கலந்த வாழ்க்கைப் பாதையைக்கடந்து, அறிவு உதயம் பெற்றதும், துன்பம் துடைக்கப்பட்டு, ஈடில்லா இன்பம் பெற்றார் என்று கூறுகிறார்களே. அதைச் சித்தரிப்பதுபோல், புத்தர்கோட்டத்தை அணுகும்போது பாட்டையில் இனிய மாமரங்கள் மட்டுமே உள்ளன. புத்தர் கோட்டத்திலே, ஜப்பான் சர்க்கார் தானமாகத்தந்த "மணி" தொங்குகிறது. கோட்டத்தை அடுத்தாற்போல் சீனச்செல்வரொருவர், புத்தர் கோட்டமொன்று புதிதாக அமைத்துக்கொண்டு இருக்கிறார்! அங்கு.புத்த விக்ரகம், சீனஉருவத்துடன் காணப்படுகிறது.

சாரநாத்தில் சாந்த புத்தர், போதனை பல புரிந்தார். ஆனால், இன்று, சாரநாத், பக்தகோடிகள் தேடிச்செல்லும் இடமாக இல்லை. அதை அடுத்துள்ள காசியே புண்ணிய க்ஷேத்திரமாக இருக்கிறது.

"பாரதத்தாய் ஈன்றாள்; பராமரிக்கவில்லை. நான் வேறுவீடு சென்றேன்" என்று சாரநாத்திலுள்ள புத்த உருவம், கூறுவதுபோல், இந்த அநீதியைக் கேட்க ஆண்மையில்லையே உங்களுக்கு என்று கேலி செய்வதுபோல், புன்னகை புரியக்கண்டேன். "அரசகுடும்பத்தினர் நீர்! புத்தரானீர்! உம்மையே இப்பாடுபடுத்திற்றே பார்ப்பனியம், என்னை அது என்ன செய்யுமோ" என்று புத்தரிடம் கூற எண்ணினேன். பெரியார் ஈ.வே. ராமசாமி அவர்கள் என்னுடன் இருந்தார். நேரமாகி விட்டதை உணர்ந்து, தமது கைத்தடியைக் கீழே தட்டினார். சிந்தனையிலாழ்ந்திருந்தநான், விழித்துக்கொண்டேன். காற்று அடித்துக்கொண்டிருந்தது; அந்த வெண்ணிறத்தாடி அசைந்துகொண்டிருந்தது; மீண்டும் புத்தரை நோக்கினேன்! "உம்மைப்பார்ப்பனியம் நாடுகடத்தி இருக்கிறது, ஆனால், நீர் அன்றுமூட்டிய புரட்சியை அடியோடு ஆரியம் ஒழித்துவிடவில்லை. இதோ பாரீர், பார்ப்பனியத்தின் வைரி!" என்று புத்தரிடம் பெரியாரைப்பற்றி நான் கூறவில்லை. என் மனதில் எண்ணிக்கொண்டேன். அதையும் அறிந்து "நன்று! நீதிநின்று வெல்லும், ஆனால் நிச்சயம் வெல்லும்" என்று என்னைநோக்கி சாரநாத் புத்தர் கூறினது போன்றிருந்தது, அந்தப் புன்னகை!

## அந்த ரஷியா!

**"வாடாதமக்களும் வாழ்வதெங்கு?**
**மாதர்சுயேச்சை மணப்பதெங்கு?**
**நாடகமுற்போக்குக் காண்பதெங்கு?**
**நல்லிளைஞர்வேகம் மூண்டதெங்கு?**
**கோடாலிமண்வெட்டி ஆள்வதெங்கு?**
**குக்கிராமங்கள் தழைப்பதெங்கு?**
**தேடும்மனித சமாஜமெங்கு?**
**சீர்மிகும்ரஷ்யப் பொன்னாட்டிலன்றோ?"**

"ப. ஜீவானந்தம்."

" கஞ்சி நிதி லிமிடெட் "

காஞ்சீபுரம்.

மேற்படி பாங்கியில், ரூபா 1000/, 500/, 250/, 100/, 50/- ஆகிய தொகைகளில் ஏலச்சீட்டுகள் பிரதிமாதமும் நடந்துவருகின்றன. சந்தாதாரராகச் சேர விரும்புவோர் விபரங்களுக்கு நேரிலோ அல்லது கடித மூலமோ எழுதித் தெரிந்து கொள்ளவும்.

K. R. சாரி, B. A.
செகிரிட்டரி.

"திராவிட நாடு"

ஞாயிறு] 15—3—42 [காஞ்சீ.

# இலட்சார்ச்சனை!

"கேசவாய நம! கோவிந்தாய நம!...... **ஸ்ரீ வைகுண்டாய நமஹ! ஏன், ஓய் சிங்கு பட்டரே ஆகட்டுமே காரியம்**" என்று அர்ச்சகர்கள் பேச, பக்தகோடிகள் தரிசனத்துக்காக ஒருவரை ஒருவர் தள்ள, பஜனைக்கோஷ்டிகள் பாட, 'பட்டுப் புடவைகள்' நடமாட, வாலிபக்கண்கள் தாண்டவமாட, ரசமானகாட்சி, இன்று ஸ்ரீரங்கத்தில் நடக்கிறது. இந்த வைபவத்தைக்கண்டு, ரங்கர், படுக்கைவிட்டு எழுந்திரார். அங்ஙனம் எழுந்திருப்பது சினிமாவில்! வையகத்தில் நடப்பது வேறு!! உண்மையை உரைத்தால் உறுமும் பேர்வழிகள், நாம், நிந்தனைசெய்வதாகக் கூறுவர். சிந்தனைக்கு விடுகிறோம்.

"நம்தேசத்திற்கு இதரதேசத்தவர்களால் ஆபத்துகள் ஏற்படுமோ என்கிறபீதி உண்டாகியிருக்கிறது. நம் தேசத்திலுள்ள எல்லா க்ஷேத்திரங்களையும், நம்மையும் எந்த விதமான ஆபத்துக்களும் வரவொட்டாமல் தடுத்துக்காப்பாற்றும் பொருட்டு, ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தில் ஸ்ரீரங்கநாதனுக்கு இலட்சார்ச்சனை, மாசிமாதம் 19ந்தேதி ஆரம்பித்து பங்குனி 2ந்தேதி (15-3-42) முடிவடையும்படி நடத்துவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது" என்று அறிக்கை வெளிவந்தது. அதன்படி இலட்சார்ச்சனை நடக்கிறது.

இந்த இலட்சார்ச்சனை மூலம் ரங்கநாதாலயத்து ஊழியர்களுக்கும், புரோகிதக் கூட்டத்துக்கும், ரகங்களுக்கும் இலாபந்தான்! ஆனால் நாட்டுக்கு என்ன இலாபம்? ஆபத்தைப்போக்க இதுவா வழி?

ராபர்ட்கிளைவ் வந்தகாலத்திலே, இலட்சார்ச்சனைகள், அபிஷேகங்கள், ஆராதனைகள், நடத்தினேமே, கண்டதென்ன! கிளைவின் கல்லறைமீது இந்தியாவை வென்ற வீரன் என்று பொறிக்கப்பட்டிருக்கிறது! அந்த பிரிட்டிஷ் வல்லரசை இன்றுஜப்பான் சிலஇடங்களில் தோற்கடித்தது, அர்ச்சனைகளின் பலனலா? யாகயோகம் செய்தா? அவை ஆத்மார்த்தத்துறையின் பணிகள், பரலோகயாத்திரைக்குப் பிறகு பலன் வேண்டிச் செய்யப்படும் பழமைகள்!

"ரங்கூன் பிடிபட்டதா? சரி! படைகளை, பசீன் பிரதேசத்துக்கு அனுப்பு."

"படேவியாவைப் பிடித்தாகி விட்டதா? பாண்டியாங்கை ஒருகை பார்க்கட்டும் படைகள்."

"நியுகினிமீது படைகளை ஏவு! அந்தமானைத் தாக்கு! ஐராவதி நதி தீரத்தை அடக்கு!" இது ஜப்பான் செய்து கொண்டிருக்கும் இலட்சார்ச்சனை!

சோடசோபசாரம் சமர்ப்பயாமி! என்று இங்கு இன்றும் கூறிக்கொண்டிருக்கின்றனர். சப்மெரைன், விமானம், தளவாடம் இவைகளை ஜப்பான் தனது சேனைகளுக்கு சமர்ப்பித்தவண்ணம் இருக்கிறது.

பொன்னும், பொருளும், நேரமும், நினைப்பும், போருக்குச் செலவிடவேண்டிய இந்தப் பயங்கரமான வேளையிலே, வெண் பொங்கலும், சித்ரான்னமும் உண்ண, ஒரு சாக்குக்காக இலட்சார்ச்சனை செய்யுங்கள், ரங்கநாதர் இரட்சிப்பார் என்று புரோகிதக்கூட்டம் கூறி, மக்களின் பணத்தையும் நேரத்தையும் பாழாக்குகிறதே, இதை என்னென்பது!

ஐராவதி நதி முகத்துவாரத்தை முற்றுகையிட்டு **கடாரம்** என்று அக்காலத்தில் அழைக்கப்பட்டு வந்த **பர்மா**வை வென்று, அதைத் தனது சாம்ராச்யத்தில் ஓர் அங்கமாக்கிக் கொண்ட தமிழ் மன்னர் வாழ்ந்த, தமிழகத்தில் நாம் இருக்கிறோம். இந்த வீரச்செயல்பற்றி உள்ள வரலாறுகள், சிவனார் நள்ளிரவில் நந்திக்குக்கூறி நந்தி நாரதருக்குக்கூறி, நாரதர் நரிமுக ரிஷிக்குக்கூறி, அவர் அதனை ஏட்டில் எழுதிப் பர்ணசாலையில் வைத்ததை அந்தக் கோத்திரத்தில் அவதரித்த அர்த்தநாரீசுர சர்மா புத்தகரூபமாக வெளியிட்ட புராணத்தில் காணப்படுபவையல்ல! சரித்திரம்! ஆராய்ச்சி! அறிவுடையோர் மறுக்கொணா அக்கால நிகழ்ச்சிகள்.

கி. பி. 1013 முதல் 1044 வரை அரசோச்சிய இராஜேந்திர சோழன் அடைந்த வெற்றிகளைச் சரித ஆராய்ச்சிக்காரர் கூறுவர். அத்தகைய தமிழர், வீடிழந்து வீதியில் திரிகின்றனர், வேற்றூர் சென்றனர், அங்கும் மாற்றான் மருட்ட, காடுமலை கடந்து, ஏனும் புந்தோனுமாக இங்கு வந்துகொண்டுள்ளனர். "நொந்தோம், இங்குவந்தோம்" என்று அவர்கள்கூறி முடிக்கா முன்னம் "இங்கும் வந்தோம்" என்று எதிரியின் படைகள் எக்காளமிடும்போல் தோற்றுகிறது. என் செய்வது? எதை எண்ணி விம்முவது? நாட்டிலே ஒற்றுமை காணோமே என்பதை எண்ணியா? நாடாள வந்த ஆங்கிலேயர் தக்கார் தகவிலர் என்பதைத் தெரிந்துகொள்ளாது போயினரே என்பதை எண்ணியா? சோர்வும் சோகமும், பிணக்கும் தாண்டவமாடுவதை எண்ணியா? எதை எண்ணுவது, எதை மறப்பது? என்ன எண்ணி, மனஉறுதிபெறுவது. முல்லைச் சிரிப்பால் முப்புரமெரித்தார் முக்கண்ணனார், அவரிருக்க நமக்கென்னபயம் என்று எண்ணி உறுதிபெறுவதா?

ஜப்பான் பெற்றுவரும் வெற்றிகள், ராணுவத் தலைவர்களையும் ராசதந்திரிகளையும் திணறவைக்கிறது, மக்களைத் தத்தளிக்கச் செய்கிறது. பிரதேசங்கள் பல பிடிபட்டனவென்று நாம் மனமுடையவில்லை. பிடிபட்டவை மீட்கப்படக்கூடும். ஆனால் நேசநாடுகள் அடைந்த தோல்விகளால், தகுதியான தளங்கள் தகர்ந்து விட்டனவே அதுகுறித்தே நாம் கவலைப்படுகிறோம்.

ஜப்பானிய வெடிகுண்டு வீச்சுக்குப் பன்முறை ஆளான **மார்ஸ்பீ** துறைமுகத்தை நோக்கி ஜப்பானியக் கப்பல் கூட்டம் போகிறதாம். மெல்போர்ன், சிட்னி, ஆகிய இடங்களில் கடுமையாகக் குண்டு வீசிவிட்டு, இரண்டு வாரங்களில், ஜப்பான் ஆஸ்திரேலியாவைத் தாக்குமென்று **ராலீப் ஜார்டன்** கூறுகிறார். ஒரேசமயத்தில் இந்தியா ஆஸ்திரேலியா, இரண்டையும் தாக்க, ஜப்பானியருக்குப் பலம் இருக்கிறதென்று **ஹாரோல்டு கார்டு** என்பவர் தெரிவிக்கிறார். சீனப்பிரசார மந்திரியான **டாக்டர் வாங்** நேசநாடுகள் தளங்கள் பல இழந்துவிட்டன வானகபால், இனி,

மேலபர்மா, கிழக்கிந்தியா, தென்மேற்கு சீனா, ஆஸ்திரேலியா ஆகிய பிரதேசங்கள் அடங்கிய வட்டாரத்தைத் தளமாகக்கொண்டு, எதிரியைத் தாக்க வேண்டுமென்று யோசனை கூறுகிறார்.

பிரிட்டிஷ்படைகள் போரிட்டன இராணுவஇலக்குகளை அழித்தன-பிறகு பின் வாங்கி வேறிடம்சென்று அணிவகுத்துள்ளன-என்ற மாமூல் மறைந்தொழிய வேண்டும். உடைந்த உள்ளம், மிகவும் ஆபத்தானது. மக்களின் உள்ளத்தை இனியும் உடையவைக்காதிருக்கவும், உளறுவாயர்களை ஊமைகளாக்கவும், வேண்டும். அது, சீன அதிகாரி கூறியபடி, "முன்னேறித்தாக்குவதால்" தான் முடியும். அதனையும் விரைவினில் செய்தல் வேண்டும்.

மாட்ரிடில் உள்ள ஜப்பானிய ராஜ தந்திரிகள், பசிபிக்போர், ஏப்ரல்மத்திக்குள் முடிந்துவிடுமென்றும், பிறகு ரஷியாவைத்தாக்க நேரம் கிடைக்குமென்றும் கூறினராம். விரைவில், ஜப்பான், ரஷியாமீது பாயும் என்று ஏற்படுகிறதென அங்காரா ரேடியோகூறுகிறது.

மஞ்சூரியா பகுதியில், ஜப்பான், படைகளை ஏற்கனவே குவித்து வைத்திருக்கிறது.

வசந்தகாலம் பிறந்ததும், நாஜிப்படைகள் ஒரு புறமும், ஜப்பான் படைகள் மற்றோர் புறமுமாக ரஷியாவைத் தாக்கக்கூடும் என்பதைப் பல நிபுணர்கள் எடுத்துக் கூறுகின்றனர்.

மலாய், ஜாவா, சிங்கப்பூர், இரங்கூன், ஆகியவைகள் இனி எதிரிக்குத் தளங்களாகும். இவைகளில் இருந்துகொண்டு, ஜப்பான், இந்தியா, ஆஸ்திரேலியா, ஆகிய இருஇடங்களில் ஏதாவதொன்றைத் தாக்கமுடியும், இரண்டையும் ஏககாலத்திலும் தாக்க முற்படவுங் கூடும். இலங்கைமீது பாய்ந்து, அங்குள்ள திரிகோணமலையைத் தளமாகக்கொண்டு தமிழகத்தின்மீது தாவக்கூடும்!

பேராசிரியர் புரோடோக்ஸீ, "இதுவரை உலகு கண்டறியாத உக்கிரமான போர், வசந்தகாலம் பிறந்ததும், ஆரம்பமாகப் போகிறது" என்று கூறுகிறார்.

வசந்தகாலம், வசீகரமான பெயர்! ஆனால் இந்த வசந்தத்தின்போது, தடாகத்தின் அல்லியைத்தொட்டு வண்டு முத்தமிடுவதைக் காண்பதற்கில்லை. எங்கும் இருள்! எப்பக்கத்திலும் வேட்டுச்சத்தம்! எந்த இடத்திலும் இரத்தம்! இந்த வசந்த காலம், கழுகுக்கும் நரிக்கும் வேட்டைக்காலம், ஆகுமென்றுகூறுகின்றனர்.

இந்தப்பயங்கரமான நிலைமையில், இங்கோ, தேரும் திருவிழாவும், ஆடலும் பாடலும், விருந்தும் வேட்டையும், கட்சிப்பூசலும் கசடர் ஏசலும், கொச்சைக் கருத்தினரின் குளறலும், ஓயக்காணோம்.

இவைநீங்கி, எதிரிவரின், எதிர்த்துநிற்கும் வகையான புதுமுறுக்கு நாட்டுமக்களிடம் தோன்ற வேண்டும். நேரமும் செல்வமும், திரண்டு போர்முனைக்குப் பயன்படும் விதமான உதவிகள் உருவாகத்திரளும் வகை ஏற்படவேண்டும். இல்லையேல், இன்று ஊராள வேண்டுமென்று உரக்கக் கூவுவோரின் குரல் அழுகுரலாக மாறுமோ, அன்றி "அன்றொருநாள்" என்ற அட்டவணைக்குச்சேருமோ நாமறியோம். உடலுக்குள் கிருமி, கருவிகளை அரித்துக்கொண்டிருக்கையில், உயிர் மங்கிக்கொண்டிருக்கையில், உணராது, உல்லாசமாக உலவிக்கொண்டிருக்கும் நோயாளிகள் மருத்துவரிடம் போகும் வழியிலே மரித்ததுண்டு. நாட்டுக்கு ஆபத்து எவ்வளவு வந்துளது என்பதை உணராமல், இலட்சார்ச்சனை, இரகுராம பஜனை, சுயராச்ய போதனை ஆகியவற்றில் ஈடுபடுபவர்கள் இங்குள்ளனர். நாட்டை வேட்டினின்றும் முதலில் மீட்கட்டும், பின்னர், நாடாள "நான், நீ" என்று போட்டிக்குவரட்டும், என்று கூறுவோம். 'எல்லாம்எமக்கே, எவர்க்கும்மேலோர்யாங்களே' என்றுரைத்துக் கொண்டு காங்கிரசார், ஆட்சிப்பீடத்தில் அமரவேண்டி, அரசியல் சூதாட்டமாடுவதைக் கண்டு கவலைப்பட்டோ சலித்தோ, கண் துடைக்க வேண்டுமென்றோ பிரிட்டிஷ்சர்க்கார், புதுமுறை வகுக்கப்புகுந்தால், குளிக்கப்போனவன் சேறுபூசிக்கொண்ட கதைபோலாகும். ஆகவே, நாட்டிலுள்ள கட்சியினரின் ஏகோபித்த ஆதரவுபெறத்தக்க விதமான அரசியல் மாற்றங்களைச் செய்தலே அறிவுடைமை, அதனைவிடுத்து எவர்மனங் கோணிலென்ன, இரைச்சலிடுவோருக்கு இரண்டொன்று தருவோம் என்று பிரிட்டிஷ் ஆட்சி எண்ணுமாயின், அது நாட்டிலே கொந்தளிப்பை உண்டாக்கும். நாடு இன்றுள்ள நிலையில் கொந்தளிப்புக் கூடாது. யுத்த ஆதரவு முயற்சியை வலுப்படுத்தும் வகையும் அதுவல்ல, ஆகவே சர்ச்சில் கூறுவதுபோல் இங்குவரும் சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ், நாட்டுநிலையை நன்குணர்ந்து நல்லதோர் திட்டம், நாட்டிலுள்ள கட்சிகளின் ஆதரவைப் பெறக்கூடிய முறையில் வழங்கப்படும் என்பதை விளக்கி உரைப்பார் என்று நம்புகிறோம்.

நாட்டுக்கு இன்று, ஒற்றுமை, ஒற்றுமை, என்ற இலட்சார்ச்சனை தவிர வேறொன்றும் தேவையில்லை. அதனை மக்கள் ஒவ்வொருவரும் செய்தல் வேண்டும், இன்றே செய்ய வேண்டும். ரங்கார்ச்சனையோ, கிரிப்சார்ச்சனையோ பலிக்காது!

---

தமிழர்களுக்கு

## ஓர் வேண்டுகோள்.

தன்னாட்சிக் குழுவினர் என்று சொல்லிக்கொள்பவர்களின் (காங்கரசக்காரர்களின்) தன் முனைப்பு ஆட்சிக்காலத்தில். தமிழ் மக்களின் விருப்பத்திற்கு மாறாக வலிந்து புகுத்தப்பட்ட கட்டாய இந்தித்திட்டம், தமிழ்மக்களின் ஒன்றுபட்ட பெருமுயற்சி காரணமாகத். தன்முனைப்பாட்சிக் குழுவினர் பதவியிலிருந்து விலகியவுடனே, சென்னை அரச ஆணையாளர் (கவர்னர்) அத்திட்டத்தை மாற்றி அதனை விருப்பபாடமாக ஆக்கிய செய்தி யாவரும் அறிந்ததே.

இப்பொழுது, சென்னை மாகாணத்திலுள்ள தமிழ்மக்கள், கிறிஸ்தவர்கள். ஆகியவர்களின் கொள்கைக்கு மாறாகவும், பார்ப்பனியக் கொள்கையை நிலைநாட்டும் ஒரே நோக்கத்துடனும், பெயருக்கு முன்னால் "ஸ்ரீ" என்று போடவேண்டுமென்று ஏற்படுத்திய சட்டம் சென்னை மண்டிலத்திலுள்ள பார்ப்பனரல்லாதார் அனைவருக்கும் மாறுபட்ட தென்பதைச் சென்னை அரச ஆணையாளர் (கவர்னர்) தென்னிந்திய நல உரிமைக்கழக (Justice Party) மாகாண மாநாட்டில் முடிவு செய்த தீர்மானத்தின் வாயிலாக உணர்ந்து, அச்சட்டத்தை மாற்றி. "ஸ்ரீ" என்பதற்கு மாறாகத் "திரு" என்று போட வேண்டுமென்ற தமிழ்மக்களின் வேண்டுகோளை ஒப்புக்கொள்ளும் முறையில், தமிழ் நாட்டிலுள்ள பார்ப்பனரல்லாதாரின் உடன்பாட்டைத் தெரிவிக்குமாறு அரசியல்அறிக்கை ஒன்று வெளிவந்துள்ளது. பெரியார் பெற்றுவரும் பலவெற்றிகளில் இஃது மொன்றாகும்.

எனவே. தமிழ் நாட்டிலுள்ள பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காக வேலை செய்துவரும் ஒவ்வொரு சங்கத்திலிருந்தும், "ஸ்ரீ" என்பதை எடுத்துவிட்டுத், "திரு" வென்றே பெயருக்கு முன்னால் போடவேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றி. அதனைக் கீழ்க்காணும் முகவரிக்குக் காலத்தாழ்வின்றி அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

முகவரி

சீப்செகரடரி சென்னை சர்க்கார் காரியாலயம்,
சென்னை

# சர். கிரிப்ஸ்வருகிறர்!

சர். ஸ்டோ போர்டு கிரிப்ஸ் இந்தியாவுக்கு வருகிறர். தாமாக வலிய, இங்கு போய் வருவதாகக் கூறினராம். ஆகவே மிஸ்டர் சர்ச்சில் அனுப்பிவைத்திருக்கிறர். அவர் வந்து போன பிறகு, புதுத்திட்டம் எதும் தயாராகப் போவதில்லை. திட்டம் ஏற்கனவே தயாராகிவிட்டது. அந்தத்திட்டம், 1940 ஆகஸ்ட்டு திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும்.

ஆகஸ்ட்டு திட்டத்தின்படி, யுத்தம் முடிந்ததும், கூடிய சீக்கிரம் இந்தியர்கள் இந்தியாவில் வாழுகிற முக்கியப் பகுதியினரால் ஏற்றுக்கொள்ளக்கூடியதொரு அரசியலைத் தயாரிக்கவேண்டும்.

அந்த திட்டத்தின்படி இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டந்தஸ்த்து வழங்கப்படும். ஒடுக்கப்பட்டோர், சிறுபான்மையினர், சமஸ்தானங்கள் ஆகியவைகளின் நலத்தைப் பாதுகாக்க பிரிட்டிஷ் சர்க்கார், மேற்படி திட்டத்தில் ஏற்பாடு செய்வர் என்ற முக்கிய மான கருத்துகள் வெளியாயின.

இந்தத் திட்டத்தை விளக்கிக் கூறி, இந்தியாவிலுள்ள சகலவகுப்பினரும், மதத்தினரும், ஜாதியினரும் நம்பும் படி செய்யவே சர். கிரிப்ஸ் வருகிறர்.

இது மிஸ்டர் சர்ச்சில் வெளியிட்டிருக்கும் அறிக்கையின்சாரம்.

ஆகவே சரக்கு, 1940 ஆகஸ்டில் தயாரானதுதான்! மேலே ஒட்டப்பட்டிருக்கும் லேபில் புதிதாக இருக்கக்கூடும். சரக்கு விற்பனைக்கு வருபவர், சரக்கின் அருமை, இப்போதைய அரசியல் மார்க்கட் நிலவரம், இச்சமயம் தவறினல் மறுசமயம் வாய்ப்பதரிது என்ற விஷயம், ஆகியவைகளை எடுத்துரைக்கக்கூடிய சர். கிரிப்ஸ்!

எனவே, புதிதாக, பெரும்பலன் கிட்டும் என்று நம்புபவருக்கு விரைவில் விளக்கமேற்பட்டு விடும்.

நிகா இலாபம், வைசிராய் நிர்வாகசபைக்கு, ஆச்சாரியார் போன்ற காங்கிரஸ் தலைவர்களோ, அவர்களின் ஏவெப்பட்டாளமான, சப்ரூகூட்டமோ, அழைக்கப்படக் கூடும்.

லீக்தலைவரையோ, அவரால் நியமிக்கப்படுபவரையோ, நிர்வாக சபையில் சேர்க்கமுயற்சிநடக்கலாம். அந்த முயற்சி ஈடேறிவிட்டால், மௌலவி கனம் பஜுலுல்ஹக், ஜனுப்கனம் அல்லாபக்ஷ், ஆகியோருக்கு பிரைஸ் விழலாம்!

இதுதானய்யா, ஆச்சாரியார் அலைந்து அலைந்து கண்டுபிடித்த அலாவுதீன் தீபம்!

---

## பெரம்பூர் தொழிலாளர் மீது துப்பாக்கி பிரயோகம்.

பெரம்பூரில், பக்கிங்காம் கர்னடிக்மில் தொழிலாளர்கள் வேலைநிறுத்த சம்பந்தமாக தொழிற்சாலைக்குள் கலவரம் விளைந்ததில், 11ந்தேதி போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்செய்ததில் 8-தொழிலாளர் மாண்டனர். 21பேருக்குப்படுகாயம், 100 பேருக்கு சொல்பகாயம். போலீசார்மீது கல் வீசியதாகவும், போலீஸ் லாரிகளைக் கொளுத்தியதாகவும் தொழிலாளர் மீது புகார்கூறப் படுகிறது. சென்னை கார்ப்பரேஷன் கூட்டத்தில், இதுபற்றி சர்க்கார் ஒரு விசாரணை நடத்த வேண்டுமென்று தீர்மானம் நிறைவேறியது.

---

### சர். சண்முகம் தமிழகம் வருகிறர்!

அமெரிக்க உற்பத்திக் கோஷ்டியுடன் சர். R. K. சண்முகம் அவர்கள் இந்தியாவுக்கு விரைவில் வரப் போகிறர்.

உ

# "கந்த விலாஸ்"

## அ. கந்தசாமி முதலியார் & சன்ஸ்.,

ஜவுளி வியாபாரம், ஆடிசன்பேட்டை. காஞ்சீபுரம்.

கிளை ஆபீஸ்கள்:—

கடைவீதி
சேலம் டவுன்.



சுவாமி தேருக்கு எதிரில்
கீழரதவீதி
திருநெல்வேலி.

காஞ்சீபுரம், சேலம், எங்கள் சொந்தக் கைத்தறியில் நவீன நாகரீகத்திற்கேற்றவாறு தயாரிக்கப்பட்ட பட்டு & ஜவுளி சேலைகளும், பட்டு & நூல் ஜரிகை துணிகளும், பனரஸ், கராச்சி, கொள்ளேகாலம், பெங்களூர், மதுரை, கோயமுத்தூர், புல்லம்பேட்டை, புதட்டூர் முதலிய ஊர்களில் தயாராகும் சேலை, சித்தாடை, பாவாடை, ரவிக்கைகளும், மில்லில் தயாரிக்கப்பட்ட கோட்டிங், ஷர்ட்டிங், சீட்டி, வாயில் துணி முதலான எல்லாவித ஜவுளிகளும் விலை சகாயமாயும், சரக்கு நயமாயும், சாயம் உத்திரவாதமாயும் எங்களிடம் கிடைக்கும். ஒரு முறை வாங்கி உடுத்தி பார்க்க வேணுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

கந்தவிலாஸ் :: A. K. & SONS.,

# ரோமாபுரி ராணிகளின் லீலா விநோதம்!

(வீனஸ்)

(உரிமை ஆசிரியருக்கு.)

விண்ணும் மண்ணும் அதிர, வெறியாட்டமாடி வரும் விரோதிக்கூட்டத்தைக் கண்டும் கலங்காதவீரன் வேல்விழியாளின் முன்பு வீழ்ந்துவிட்டதற்கு, சரிதத்தில் ரசமான சம்பவம், ஆதாரமாக இருக்கிறது. வாள் வீச்சுக்கு அஞ்சாத வீரன் கன்னியின் கடைக்கண் வீச்சால் வீழ்ந்ததுண்டு. எந்தக்கணைக்கும் கலக்கமுறாத காவலனும், அழகியின் புன்னகையால் பொசுக்கப்பட்டதாகச் சம்பவம் உண்டு.

கோட்டைகளில் மண்டைகள் மோதவும், அகழ்களில் பிணங்கள் மிதக்கவும், இருதயங்கள் பிளக்கவும், பெண்ணின் பிரேமை காரணமாக இருந்திருக்கிறது. ராஜ்யங்களில் ரசாபாசங்கள், அரண்மனைகளில் அமளி, குடும்பங்களில் கொந்தளிப்பு, கோமளவல்லிகளால், உண்டானதற்கு எல்லா நாட்டுச் சரிதங்களிலும் ஆதாரங்கள் உள்ளன. தான்கோரும் மாதின் ஓடைக்குளிர் பார்வைக்காக, ஓராயிரம் வீரர்களையும் ஒருங்கே எதிர்க்கவும் உள்ளம் இடங்கொடுக்கும்! ஆனால் காமத்துக்கே காலத்தையும் கருத்தையும் செலவிட்டு, கதிகெட்ட மன்னர்களும் உண்டு. ஒரு சரசியின் சல்லாபத்துக்காக சாம்ராஜ்யம் சிதைந்ததுமுண்டு. மோஹனாங்கிக்காக ஒருவர்மீதொருவர் மோதிக்கொண்டு, மோசம்போனதுமுண்டு.

இருகண்கள் இருதயத்தை எவ்வளவு பாடுபடுத்திவிடுகின்றன! அந்த இதழ், கிடைப்போருக்குத்தரும் இன்பம் எத்தனை, கிடைக்கப்பெறாதவருக்குத் தரும் இன்னல் எவ்வளவு! பண்டை நாட்களில் சிறந்த வீரர்கள் சாம்ராஜ்யங்களைத் தமது வாள் வலிமையால் சித்தரித்து, வளைஒலிக்குக் காணிக்கையாகத் தந்துமிருக்கின்றனர்.

மன்னாதிமன்னர்கள் தமது மனோஹரிகளிடம் கொண்டிருந்த காதலை, கவிதை, சிற்பம், ஓவியம்,பூங்கா, பொலிவுறும் புது அரண்மனை ஆகியவைகளை உண்டாக்கி, உலகிற்கு உணர்த்துவித்தனர்.

பண்டைய ரோம் சாம்ராஜ்யம், போகபோக்கியங்களால் பொசுக்கப்பட்டது. வாளேந்தும் வீரர்கள் வளை ஏந்தும் தையலரின் அடிமைகளாகி, அரசை அழித்துக்கொண்டனர். அத்தகைய காமவல்லிகளின் கதைகள், சுவைமட்டுமல்ல, கருத்துகள் பல தெரிந்து கொள்ள உதவி செய்யும்.

ரோம் சாம்ராஜ்யத்து ராணிகள் பலரின் லீலா விநோதங்களை, சுருக்கமாகஇனிஎடுத்துரைப்போம். நவரசம்ததும்பும் அவர்களது வரலாற்றைப் படிப்போர், ரோம்சாம்ராஜ்யம் சிதைந்ததற்கு அந்த ரசவல்லிகளால் நேரிட்ட சதிகள், சச்சரவுகள், சமர்கள் ஆகியவைகள் காரணமாக இருந்திருக்க வேண்டுமென்பதை உணருவர் என்று நம்புகிறோம்.

ரோம் சாம்ராஜ்யத்தில், பலவித வளங்கொண்ட நாடுகள் இணைக்கப்பட்டிருந்தன. அதுபோலவே ரோம் சாம்ராஜ்ய ராணிகளில் பலரகங்கள் இருந்தனர். உருவத்தால் மட்டும் மாறுபட்டவர்களல்ல, நடத்தையால் மாறுபட்டவர்கள். கணவனுக்காகக் கண்களைக் கசக்கி வாழ்ந்தார்களும் உண்டு, கணவனின் வாழ்க்கையைக் கசக்கிப்பிழிந்த காதகிகளும் உண்டு. அன்னாரின் அந்தரங்க வாழ்க்கை வரலாறுகளைத் தொடர்ந்து தீட்டுவோம்.

## I. ஜூலியஸ் சீசரின் மனைவிமார்.

இத்தாலி, கிரீஸ், திரேஸ், மாசிடோனியா, ஸ்பெயின், பிரான்சு, பிரிட்டன், சிரியா, பாலஸ்தீன், ஈஜிப்ட் ஆப்ரிக்கா. ஆசியா, மத்தியதரைக்கடற் தீவுகள், ஆகிய எங்கும், ரோம்சாம்ராஜ்யத்தின் வெற்றிக்கொடி ஒருகாலத்தில் கெம்பீரமாகப் பறந்துகொண்டிருந்தது. எந்த நாகரீகநகரிலும் ரோம்சாம்ராஜ்ய அதிகாரி, அரண்மனையில் கொலுவீற்றிருக்கவும், எந்தக் கோட்டையைச்சுற்றியும் அஞ்சாநெஞ்சினரான ரோம்நாட்டுரணசூரர்கள் காவல்புரியவும், எந்தநாட்டுப் பொருளும் ரோம் நகரக் கடைவீதிகளில் குவிக்கப்பட்டும், எந்த நாட்டவருக்கும் எஜமானர்களாக ரோம்நாட்டவர் இருந்த காலமுண்டு. ரோம்நாட்டுவீரர்களின்குதிரைப்படையின் குளம்புகளின்கீழ் சிக்கிச்சிதைந்தவர்கள் எண்ணற்றவர்கள். எத்தனையோ மண்டலங்களில் மண், குருதியுடன் கலந்து சேறாகி, புதைப்பாரற்ற பிணத்தைக் கழுகுகள் குத்தித்தின்று கொண்டிருக்க, நாற்றம் நாலா பக்கங்களிலும், வீசிக்கொண்டிருந்தது. ரோம் சாம்ராஜ்யத்தின் மதிப்பும் மணமும், இந்த நாற்றத்தையும் அடக்கிவிட்டு, மேதினியில் பரவியதுண்டு.

அத்தகைய ரோம் சாம்ராஜ்யம் எங்கே?

தேய்ந்து போன தேஜஸ் திவ்யமாகப்பிரகாசித்துக்கொண்டிருந்த காலத்தில்,காவலர் பலகட்டழகிகளுடன் கவலையுற்று வாழ்ந்துவந்தனர். காதலைப்பொழுதுபோக்காகக் கொண்டு காலந்தள்ளினர். சங்கீதத்தை, சரசிகள், மீட்டும் வீணையிலல்ல, அவர்களின் சதங்கை ஓசையில் கேட்டு மகிழ்ந்தனர். திராட்சைரசப் பானத்தைப் பருகி திருப்தி ஏற்படாது கன்னியின் கனிரச மொழிச்சுவையைப் பருகினராம்.

போக போக்கியத்தில் இங்ஙனம் புரளுமுன்னம் புரளவசதி ஏற்பட, போர்வீரர்கள் பல்லாயிரவர் தமது உயிரைப் பலிகொடுத்தனர் அத்தகைய வீரர்களின் வேந்தன். ஜூலியஸ் சீசர்!

**கிரீஸ்** என்றதும் எங்ஙனம் **அலெக்சாண்டர்** என்ற வீரன் நம் மனக்கண்முன் நிற்கிறாரோ, அதுபோல், **ரோம்** என்றதும **ஜூலியஸ் சீசர்** நமதுமனக் கண்முன் நிற்பார்.

ரோம் சாம்ராஜ்ய வளர்ச்சிக்காக அவர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. அவர் காணாத போர்க்களமில்லை, அனுபவியாத அதிகாரம் இல்லை. போகாத ஊரில்லை, புனையாத 'ஆடையணி இல்லை. அவரது புகழ் பரவாத இடமில்லை, அவருக்குப் பிற்காலத்தில் கிளம்பாத பகை இல்லை!!

ரோம் சாம்ராஜ்யத்தைச் சித்தரிக்க, வாளைஎழுதுகோலாகவும், இரத்தத்தை மையாகவுங்கொண்டு, பலகாலும் முயன்று வாகை சூடிய ஜூலியஸ்சீசர், வாழ்க்கையில், இன்பங்காணவும், போர் பலபுரிய வேண்டி நேரிட்டது.

அவருக்குநாலு மனைவிமார்! இரண்டாம் மனைவியும் நாலாவது மனைவியும் அவருக்கு [illegible] அமைந்தனர். நாலாவது மனைவியின் அழகும் [illegible] புகழும்ஒருங்கே ஓங்கிவளர்ந்தது. சதியால் [illegible]க்கப்பட்டான், விதவைத்தன்மை அவளது [illegible]

அழித்தது. மனமொத்த வாழ்வு அவர்களுடையது. ஆனால், அது நாலாந்தாரத்தால் ஜூலியஸ்சீசர் கண்ட சுகம்! முதல் மூன்றும் எப்படி? சீசரின் அந்தரங்க வாழ்க்கையின் முழுப்படத்தைக் கண்டால்தான், நாலாந்தாரமாகவந்த நாயகியின் நற்குணம் நன்கு விளங்கும்.

எத்தனையோ காளைகளில்ஒன்றாக ஜூலியஸ் சீசர் இருந்த பொழுதே கலியாணம் ஆகிவிட்டது. கலியாணம் செய்துவைக்கப்பட்டது! செய்துவைக்கப்பட்டது என்பதற்கும் செய்துகொண்டான் என்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம்! அதைக் குடும்பங்கள் பல எடுத்துக்காட்டும், கூர்ந்து நோக்குவோருக்கு. **கஸ்டியா** என்ற கன்னிகையை, சீசர் மணந்து கொள்ளும்படி நேரிட்டது-பெரியவர்களின் ஏற்பாட்டினால். சீமான்வீட்டுச் சிங்காரி என்றபோதிலும், சீசருக்கு அவள் செந்தேனாக இல்லை. எனவே, சீசர் சுயமாகக் காரியம் செய்யும் சுபாவம்பெற்றதும், **கஸ்டியா** என்ற தனது முதல்மனைவியை விலக்கிவிட்டான். அக்காலத்தில், புகழும் செல்வாக்கும்பெற்று விளங்கின **சின்னா** என்பவரின்மகள் **கர்னீலியா** என்பவள்மீது காதல் கொண்டான். கடிமணம் நிறைவேறியது.

காதல்பாதை கரடுமுரடானது என்பர் கவிஞர். சீசர் தானாக அமைத்துக்கொண்ட காதல் பாதையில் பயங்கரப் பள்ளங்கள் காணப்பட்டன. பெற்றோர் உண்டாக்கினதல்ல, பெண்வீட்டார் ஏற்படுத்தினதுமல்ல, அரசியல் சுழல் ஏற்படுத்திய பள்ளம் அது. ஜூலியஸ் சீசர் அக்காலத்தில் ரோம்நாட்டு ஆட்சிக்குழுவில் ஆறாவது ஏழாவது பேர்வழி. **சல்லா**என்ற வீரனுக்கேவிருதுகள் அதிகம். அவன்குறுக்கிட்டான், சீசரின்காதலில். சீசருக்கும், சல்லாவுக்கும் பகைமைகிடையாது ஆனால் சல்லா மன்னிக்க முடியாத பெருங்குற்றத்தை சீசர் செய்துவிட்டான். குற்றம்யாது? எந்த சின்னாவை **சல்லா** தனது ஜென்ம விரோதிஎன்று கருதிக்கொண்டிருந்தானோ, அதே சின்னாவின் மகளைச் சீசர் மணம்புரிந்துகொண்டது குற்றம்! **கர்னீலியாவை** நீக்கிவிடும்படி சல்லா வற்புறுத்தலானான். எப்படி எங்கிருந்து நீக்குவது? நெஞ்சில்புகுந்த நேரிழையாளை சீசர் நீக்கவேண்டுமானால், நெஞ்சையே நீக்கவேண்டும்! சல்லாவின் சீற்றம் பயத்தைக்கொடுத்தது, ஆனால் கர்னீலியாவிடம் அவன்கொண்டிருந்தகாதல், பயத்தைவிரட்டியடித்தது. மேலும், தனது மகளின மானத்தை மங்கவைக்க மருமகன் துணிந்தால், சின்னாசீறுவான். சின்னாவின் சீற்றம், சல்லாவுடையதைவிடக்குறைந்த ஆபத்துடையதென்று கூறமுடியாது. இருபக்கம் இருநெருப்புகள்! இடையே, குளிர்ந்த முகவதி கர்னீலியா. அவளுடன் கூடிக்களித்து, இருஜ்வாலையையும் இலட்சியம் செய்யாது சீசர் சிலகாலம் வாழ்ந்துவந்தான். ஆனால் சல்லாவின் கோபத்தால் சாய்க்கமுடியாத சதிபதிகளின் தோழமையை, மரணம் துண்டித்துவிட்டது. கர்னீலியா மறைந்தாள். சீசர் கலங்கினான், கதறினான், ஊரார் முன்னம் சீசர், தனது உள்ளத்தில் கொந்தளித்த எண்ணங்களை எடுத்துரைத்தான். ஆரணங்கை இழந்ததால் ஆழமான வடு அவனதுநெஞ்சில் ஏற்பட்டது. அதைமாற்ற, சல்லா, தனது உறவினனான பாம்பேயஸ் ரூபஸ் என்பவரின் மகள், பாம்பேயா என்ற மங்கையைக் கருவியாக்கக் கருதினான். பாம்பேயா சீசரின் மனைவியானாள். மனைக்குச் சொந்தக்காரியானாளேயன்றி, சீசரின் மனதுக்குச் சொந்தக்காரியாகவில்லை. கீர்த்தியும் செல்வாக்கும்பெற்ற அந்தக் குடும்பத்தில், எவ்வளவு கோணல் வளர்ந்தது என்பதைக் கூறுவோம்.

ஜூலியஸ் சீசரின், மூன்றாந்தாரமாகவந்த **பாம்பேயா** அவனது வாழ்க்கைக்கு செந்தேளானாள்! மணந்தது சீசரை, ஆனால் அவளது மனம் நாடியது வேறொரு இளைஞனை! அவன் அழகன், ஆனால் ஆபாச நடத்தைக்காரன். கிளாடியஸ் என்ற அந்தக்காமுகன், தன் கட்டழகாலும், படாடோபத்தாலும், பாம்பேயாவின் மனதைப்பாகாக உருக வைத்துவிட்டான். அவனது நினைவால் பாம்பேயாவின் உடல்இளைத்தது. அவளது உள்ளத்தில் ஊன்றியிருந்த வஞ்சகம் வளர்ந்தது. கிளாடியசை அடைய வேண்டுமென்று கவலைகொண்டவளாய், பாங்கியைப் பக்குவப்படுத்தினாள். இதற்குள் காமச்சேட்டையில் கைதேர்ந்த கிளாடியஸ், எப்படியேனும், பாம்பேயாவைப்பெற வேண்டுமென்று சூழ்ச்சிகள் செய்து வரலானான்.

**கர்னீலியாவிடம்** இருந்த கவர்ச்சியை சீசர் பாம்பேயாவிடம் காணமுடியவில்லை. ஆகவே சீசர், மேலும் மேலும், ரோம்நாட்டு அரசியல் வியவகாரத்தில் தனது செல்வாக்கைப் பெருக்கிக்கொள்வதில் காலந்தள்ளிவந்தான். நல்லசமயம் இதுவென்றுஎண்ணி கிளாடியஸ் கள்ளக்காதலுக்குத் தூபமிட்டுக்கொண்டிருந்தான். இருவரின் இயல்பும் நன்குதெரிந்த சீசரின் தாயாராகியநரைமூதாட்டி, பாம்பேயாவின் போக்கை சர்வஜாக்ரதையாகக் கவனித்துவந்தாள். அவளதுகண்கள் பாம்பேயாவின்மனதிற்குள்வளர்ந்துவரும் சூதான எண்ணங்களைக்கூடத்தெரிந்து கொள்ளக்கூடிய கூர்மையானவைகளாகயிருந்தன! இந்தத்தடை பாம்பேயாவின் தாபத்தை அதிகப்படுத்திவிட்டது. தத்தளித்தாள்! அந்நாளில் மாதர்கள்மட்டுமே கொண்டாடும் திருவிழாவொன்றுண்டு. கேளிக்கையும், விருந்தும், மாளிகைக்குள் நடக்கும். ஆடவர் அனுமதிக்கப்படுவதில்லை. அந்தவிழா, பாம்பேயே மாளிகையில் நடந்தது. பாங்கியின் துணைகொண்டு கிளாடியஸ் பெண்வேடம் புனைந்துகொண்டு, மாளிகைக்குள்சென்று மாதரோடு மாதராகக்கலந்து இருந்தான். பாம்பேயாவிடம் பாங்கி இந்த ஆனந்தச்செய்தியைக் கூறச்சென்றாள். ஆவலோடு பாம்பேயா, சர்வாலங்காரங்களுடன், காதலன் வரவுக்காக காத்துக்கொண்டிருந்தாள். மாமியின் கண்களில் மிளகாய்ப்பொடிதூவிவிட்டோம், மனதுக்கிசைந்த மணாளனிடம் கொஞ்சிக்குலாவலாம் என்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தாள். அவசரக்காரன் ஆத்திரத்தால் அழிவது திண்ணமன்றோ! கிளாடியசின், கண்கள், மாளிகையின் மூலைமுடுக்கெல்லாம் பாய்ந்தன. எங்கே பாம்பேயா, ஏன் இன்னம் காணோம், செய்திசொல்லப் போன பாங்கி எங்கே என்று எண்ணி, துடிதுடித்துக் கொண்டிருக்கையில், விழாவில்கலந்திருந்த ஒருமங்கை, ஏதோ வினவ சூதுக்காரக் கள்ளன் வேடத்தை மறந்து, சுயகுரலில் பதில்கூற, மங்கை, "ஆண்! யாரோ ஆடவன் பெண்உடையில் நுழைந்துவிட்டான்" என்று அலறினாள். விருந்துமண்டபத்தில் அமளி! விளக்குகள் பல கொண்டுவரப்பட்டன. விபரீதம்நேரிட்டதை உணர்ந்த பாம்பேயா, சாமர்த்தியமாக அவ்விடம் வந்தாள். காமத்தால் கண்மயங்கிக்கிடந்தகிளாடியசை இழுத்துக் கொண்டுபோய், ஒரு அறைக்குள்போட்டு மூடிவைத்தாள்.

உலகை, தனது வீரத்தால் நடுங்கவைத்த சீசரின் மனைவியின் செயல் இது!

மாமிமகா கெட்டிக்காரி. மாளிகை பூராவும் தேடினாள். மைவிழியாள்போல் வேடமிட்டுக்கிடந்த குடிகேடனைக்கண்டு பிடித்தாள். ரோம்நகர் முழுவதும் இந்த ரசாபாசம் தெரிந்துவிட்டது. கிளாடியஸ்மீது குற்றம் சுமத்தப்பட்டது. பலசாட்சிகள், அவனது குற்றத்தை மெய்ப்பித்தனர். ஆனால், ராஜாங்கத்தில் அவனுக்கிருந்த செல்வாக்கினால் அவன் தண்டிக்கப்படவில்லை.

சீசரின் நிலை என்ன? வதந்தியைக்கேட்டு அவன் வதையவில்லை. தனது மதிப்புக்குக் கறை ஏற்பட்டதே என்ற அளவுக்கு வருத்தம் இருந்ததேதவிர, நெஞ்சு துடித்தவனாகக் காணப்படவில்லை. "பாம்பேயா பழியேதும் செய்திலள், எனினும், சீசரின் மனைவிமீது

சம்சயம் ஏற்படவும் இடமிருத்தல் கூடாது, எனவே அவள் இனி என்மனைவியாகாள்'' என்று சீசர்கூறிவிட்டான். பசப்புக்காரி பாம்பேயா விலக்கப்பட்டாள்.

மூன்றாந்தாரத்தால் வந்த 'வினை' போகவும், கார்னீலியா காலத்து அடைந்து பின்னர் இழந்த இன்பத்தைச் சீசர் பெறவும், மார்க்கம் கிடைத்தது. ரோம் நாட்டு மன்னர் பரம்பரையிலுதித்த பரிமளவல்லி, **கல்பூர்னீயா** என்றோர் கன்னிகைமீது சீசர்காதல் கொண்டு கடிமணம் புரிந்துகொண்டான். கல்பூர்னீயா, தனது இளமை, அழகு, அன்பு, அறிவு, பண்பு, ஆகியவற்றால், சீசருக்கு மகிழ்ச்சியூட்டி, அவனது வாழ்க்கையின் 'அமிர்தமாக' விளங்கினாள். அவளது காலத்தில், சீசரின் காதல்வாழ்க்கை கதிர்விட்டுப் பிரகாசித்ததுபோல், அரசியல்வாழ்வும் அளவற்று வளர்ந்தது. ரோம்நாட்டின் ஈடுஎதிர்ப்பில்லாத தலைவனானான். மணிமுடி அவனது காலடியில் கிடந்தது. அவனது சொல்லே சட்டம், புன்சிரிப்பே பரிசு! ஆனால், உச்சநிலை அடைந்த சீசரை, உடனிருந்தே வீழ்த்த பாதகன் புரூடஸ், பழிக்கஞ்சாப்படைதிரட்டி, ரோம்சாம்ராஜ்ய சபாமண்டபத்துக்கு சீசர் போகும் வழியில் குத்திக்கொன்றான். புரூடசின் பாதகச் செயலுக்குப் பல காரணங்கள் கூறப்பட்டன. அவைகளில் ஒன்று. பெண்ணால் வந்தவினையாகும். புரூடசின் தாயாருக்கும் சீசருக்கும் கள்ளக்காதல் உண்டென்றும், புரூடசின் துவேஷத்துக்கு அஃதோர் காரணமென்றும் கூறுவர்.

சீசரின் முடிவுகண்ட கல்பூர்னீயா, காலம் தனக்குச்செய்த கேட்டை எண்ணினாள். கசிந்துருகினாள்! பின்னர், "அரண்மனை, அலங்காரம், அந்தஸ்து வேண்டேன்'' என்று கூறிவிட்டு, செல்வத்தில் ஓர் பகுதியை அந்தோனி எனும் சீசரின் நண்பனிடம் தந்து, சீசரைச் சிதைத்தவரைச் சிதைக்குமாறுகூறினாள். கல்பூர்னியாவின் எண்ணம் பின்னர் ஈடேறியது.

---

## அவசரமாகத் தேவை!

(2-ம் பக்கத் தொடர்ச்சி.)

தாரா?'' என்று தோழர் சிவராஜ் மேலும் கேட்டால், "ராணுவத்தில் ஆட்கள்சேர்க்கும் முறைபற்றிஎனக்கு முன்பிருந்த உள்நாட்டு மெம்பர் கூறினதைவிட நான் வேறொன்றும் கூறுவதற்கில்லை'' என்று ஆச்சாரியார் கூறுவார். சென்னை சட்டசபைப் பழக்கத்தை வைத்துக்கொண்டால், தோழர் சிவராஜின் கேள்விகளுக்கு கேளாக் காதைத்திருப்பி விடக்கூடும்!

ஆகவே, ஆச்சாரியார் அதிகாரரூப மெடுக்குமுன்னம், ஒருமூச்சு, பேசித்தீர்த்து விடுவோம் என்று துணிந்து விட்டார் போலும்! அதனாலேயே அவர் அத்தனை அபத்தங்களைப் பேச முடிகிறது. கேளுங்கள் அவரது கித்தாப்புப் பேச்சுகளை!

வேப்பிலை வீசிப்,பிசாசை ஓட்டிவிடுவதைப்போல, எளிதில் இந்து-முஸ்லீம் பிணக்கை ஓட்டிவிட முடியுமாம்! ஏனெனில், இந்து-முஸ்லீம் பிணக்கு என்பதே ஒரு கட்டுக்கதையாம்!

ஜனாப் ஜின்னாவும் இவரும் ஒருமுறை சந்தித்துப் பேசினால் சகலமும் சரியாகிப்போகுமாம்!

மகாத்மா திறமைசாலியா, இந்த ஆத்மா திறமைசாலியா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், ஆச்சாரியாரின் இந்தப்பேச்சைக் கேட்பவர், ஆச்சாரியார் மகாத்மாவைவிட மகா சூரர்என்றுஎண்ண இடமிருக்கிறது. ஏனெனில் வேப்பிலைவீசி விரட்டி விடக்கூடிய இந்து முஸ்லீம் பிணக்கு என்னும் பிசாசை ஓட்ட, மகாத்மா பலப்பல முறைமுயன்று, 21நாட் பட்டினி முதற்கொண்டு, இருதயத்தைத் திறந்து பேசுவது, காலிசெக்கில் கையொப்பமிட்டுக் கொடுப்பது முதலிய எத்தனையோ "வேப்பிலைகள்'' அடித்தும்விரட்ட முடியவில்லை என்று கூறியிருக்க, ஆச்சாரியார் இதனை அனாயாசமாக ஓட்டிவிட முடியும் என்று கூறுகிறாரே, இது "திமிர்வாதம்'' என்று நான் கூறினால், 'திட்டுகிறான் பரதன்' என்றுதேசியத்தோழர்கள்கூறுவார்கள், 'கயிறு திரிக்கிறார் கருப்புக்கண்ணாடியார்'' என்று சொன்னால், 'கண்ணான் காட்டிய வழியைக் கண்டவரைக் கண்டிக்காதே' என்று காங்கிரசார் காய்வர், நான், என்ன கூறுவது ஆச்சாரியாரின் போக்கை விளக்க நீங்களே கொஞ்சம் சொல்லுங்கள்.

அலட்சியமாகப் பேசுவது எளிது. அபத்தம் பேசுவதும் எளிது. ஆனால் அந்த அபத்தத்தை உண்மைபோல் தெரியும்படி சித்தரிப்பது சற்றுக் கஷ்டம். ஆச்சாரியார் இந்த வித்தையை மிகச்சமர்த்தாகச் செய்து காட்டியிருக்கிறார்.

ஜப்பானியர் வெற்றிகள் பெற்று வருவதன் காரணம் என்ன? சொல்லுகிறார் அவர், மக்கள் வேறு அரசாங்கத்தை நடத்துபவர்கள் வேறு என்ற நிலைமை இருந்ததால் ஜப்பான் வெற்றிகள் அடைந்ததாம். அதற்கு உதாரணம் தருகிறார். பிலிப்பைன் தீவிலே இருக்கும் மக்கள்பிலிப்பைன் இனத்தவர், ஆனால்ஆட்சி அமெரிக்கருடையது. ஆகவே ஜப்பான் ஜெயித்தது! மலாயாவில் மலாய் மக்கள், சீனர், இந்தியர் உள்ளனர், ஆட்சி பிரிட்டிஷாருடையது, எனவே ஜப்பான் ஜெயிக்க முடிந்தது. பர்மாவில் மக்கள் பர்மியர், ஆட்சி பிரிட்டிஷாருடையது, எனவே அங்கு ஜப்பான் ஜெயிக்கிறது. ஆகவே மக்கள்வேறு, ஆட்சி வேறுமக்களுடையது என்று நிலைமை இருந்தால், எதிரி ஜெயிக்க முடிகிறது. அந்தந்த நாட்டுமக்களே அந்தந்தநாட்டு ஆட்சியில் இருந்தால் எதிரிக்கு ஜெயம் கிடைக்காது. இது ஆச்சாரியாரின் வாதம். இது உண்மைதானா? என்று பார்ப்போம்.

மலாயா வீழ்ந்ததற்குக் காரணம், அங்கு ஆட்சி மலாய் மக்களிடமின்றி வெள்ளையரிடம் இருந்ததால் தான் என்று ஆச்சாரியார் கூறுவது உண்மையானால், பிரான்சை பிரன்ச்சுக் காரர்களே ஆண்டு கொண்டிருந்தும், பெல்ஜியத்தில் பெல்ஜிய மன்னன், நார்வேயில் நார்வே இனமன்னன், ஹாலந்தில் அந்த இன ராணி, கிரீசில் கிரேக்கராட்சி, போலந்தில் போலந்து மக்கள் ஆட்சி, என்று சுயராச்யம் இருந்தும், ஏன் ஹிட்லரிடம் அவைகள் தோற்று விட்டன.?


இந்தக் கேள்விக்கு ஆச்சாரியார் என்னபதில் கூற முடியும்? ஆனால் இந்தக் கேள்வியை அவரையார் கேட்பது? யாரும் கேட்கமாட்டார்கள் என்ற தைரியத்தால் ஆச்சாரியார் எதை வேண்டுமானாலும் பேசிக் கொண்டிருக்கலாம், பேதைகள் பலர் நம்பலாம், ஆனால் பகுத்தறிவுக்கு முன்னம் அவரது வாதங்கள் அரை விநாடி கூட நிற்காது.

வேப்பிலை வீசி, அவர், இந்நாட்டிலே உள்ள இந்து முஸ்லீம் பிணக்கைத்தீர்ப்பதுகூடச்சற்றுத் தாமதித்து நடத்தப்படலாம். ஆனால் அவருக்கு ஒரு அரை டஜன் எலுமிச்சம் பழங்கள் வெகு அவசரமாகத் தேவை. அவருக்குப்பித்தம், அதற்காக எலுமிச்சம் பழத்தைத் தேய்த்துத் தலை முழுகவேண்டும் என்று நான் கூறுகிறேன் என்று தவறாகக்கருதிக் கொண்டு, கோபிக்க வராதீர்கள். வேலைகிடைக்கும் போலிருக்கிறதே அவருக்கு, டில்லிக்குப்போய் வைஸ்ராய் துரையையும், மற்றத் துரைமார்களையும் பார்க்கப் போகும்போது வெறுங்கையோடு போகப்படாது, எலுமிச்சம்பழம் எடுத்துச்சென்றால், மரியாதை செலுத்தும் வகையில் அவைகளை, துரைமார்களிடம் கொடுக்கலாம்; அதற்காகச் சொன்னேன்!!

## பாஷா சாஹிப் என்கிற B. சையத் காசீம் சாஹிப்,

ஷராப் & நகை வியாபாரம், பெரிய காஞ்சிபுரம்.

நீண்டகாலமாக நாணயமும் நம்பிக்கையும்பொது ஜன நன் மதிப்பும் பெற்றது. எமது கடையில் தற்காலத்திற்கேற்ற புதிய மாதிரி சவரப்பொன் ஆபரணங்களும் வேலைப்பாடு அமைந்த எல்லா தினுசு வெள்ளிச் சாமான்களும், பஜார் விலைக்கு கூடுமான வரை சகாயமாகவும் உத்திரவாதத்துடனும் கிடைக்கும்.




சகோதர சகோதரிகளுக்கு, தேவையான எல்லா விதமான ஆபரணங்களையும் குறித்த காலத்தில் குறைந்த கூலியில் சிறந்த முறையில் அநுபவம் வாய்ந்த தொழிலாளரைக் கொண்டு தயாரித்துக்கொடுக்கப் படும்.

தயவு செய்து ஒருமுறை ஆர்டர் கொடுத்து உண்மையை உணரவும்.

## T. K. S. சகோதரர்களின் நாடக ஆரம்ப விழா!

கும்பகோணம்

### ஸ்ரீ வாணிவிலாச தியேட்டரில்

"மேனகா", "குமாஸ்தாவின் பெண்" முதலியபடங்களில் நடித்து புகழ்பெற்ற
"முத்தமிழ்க்கலா வித்துவரத்ன" T. K. S. சகோதரர்களின்

**மதுரை ஸ்ரீ பால ஷண்முகாநந்த சபையாரால்,**

மதுரையில் 108 நாட்கள் நடத்தி வெற்றிக்கொடி நாட்டிய

# சிவ லீலா

(உரிமை பெற்றது)

**14-3-42 சனிமுதல் 31-3-42 செவ்வாய் வார தினமும்.**

ஞாயிறு, புதன், வெள்ளி, மாலை 6-30
மற்ற நாட்களில் இரவு 9-30.

T. K. S. & Brothers,
Proprietors

"சிவலீலா" கதைப் புத்தகம் 0—8—0.

வேண்டுவோர் எமக்கே எழுதவும்.


Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M A at 51 Nimanthakara Street, L Conjeeveram.